# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA.

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone : No. 300

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு வைகாசிமாதம் 20-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 19-ம் இலக்கம்


## டி மசனெட் ஆண்டவருடைய மறைவின் நூற்றுண்டு நிறைவுவிழா

### (21-5-1861 — 21-5-1961)



அன்று 21-ம் நாள் வைகாசித் திங்கள் 1861-ம் ஆண்டு. மார்செயில்ஸ் நகரம் முழுவதும் அமைதி நிலவிற்று. கோவில் மணிகள் எல்லாம் ஏதோ ஒரு அமங்கல செய்தியை அறிவிப்பனபோன்று ஒலித்துக்கொண்டிருந்தன. நகரை மூடியிருந்த இருளைத்தானும் சற்றேனும் கவனியாது நாற்றுக்கணக்கான மக்கள் — பெரும்பாலும் ஏழைமக்கள் மார்செயில்ஸ் நகரின் மேற்றிராணியார் இல்லத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். இவ்விசேட சம்பவம் நிகழ்வதற்குக் காரணம் என்ன? ... ... ... தம் வாழ்நாள் முழுவதும் ஏழைகட்கு ஞானத்தொண்டு ஆற்றும் பணியில் செலவு செய்துவிட்டு, மரணித்த பின்பும் அத் திருத்தொண்டைப் புரிவதற்காகத் தேவ தொண்டர்களை அளிக்கவல்ல அமலமரி பரித்தியாகிகள் சபையைத் தாபித்து வைத்த ஏழைகளின் அப்போஸ்தலரும், அமலமரி பரித்தியாகிகள்சபைத் தாபகரும், மார்செயில்ஸ்நகர மேற்றிராணியாண்டவருமான சாள்ஸ் யோசவ் இயூஜின் டி மசனட் ஆண்டவர் அவர்கள் அன்றுதான் தம்முடைய பூலோக வாழ்வை முடித்துப் பரலோகம் சென்றனர். இதுவே அன்றைய விசேட நிகழ்ச்சிக்குக் காரணம் என்க.

நூறுஆண்டுகளுக்குமுன் நிகழ்ந்த இச்சம்பவத்தை இன்று நாம் ஏன் அம்பலத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஐயம் ஏற்படலாம். ஏனெனில், இன்று அமலமரி பரித்தியாகிகள் தொண்டாற்றிவரும் நாடுகள் எல்லாவற்றிலும் இத் தேவதொண்டர் டீ மசனட் ஆண்டவர் அவர்கள் பரமபதம் அடைந்த நூற்றுண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிருர்கள். இலங்கை மக்களுக்கு அமலமரி பரித்தியாகிகளைப் பற்றிச் சொல்லத்தேவையே இல்லை. அவர்களை இவர்கள் நன்கு அறிவர். அன்றியும், இலங்கை மக்களுக்குப் பணிபுரிவதில் தங்களைப் பூரணமாக அர்ப்பணம் செய்த மகாவந். செமேரியா ஆண்டவர், மகாவந். பொஞ்ஜீன் ஆண்டவர், மகாவந். மெலிசன் ஆண்டவர், மகாவந் ஜூலேன் ஆண்டவர், மகாவந். கியோமார் ஆண்டவர், மகாவந். குடேற், மாற்க், மஸ்ளோன் ஆண்டவர்கள், வண. பிளாஷோ சுவாமியார், வண. லஞ்சேடி சுவாமியார், வண. சுணவல் சுவாமியார், வண. கொவின் சுவாமியார், வண. பகமுனே சுவாமியார், வண. ஞானப்பிரகாசர் சுவாமியார், வண. மரிசலீன்

[ தொடர்ச்சி 8-ம் பக்கம் ]

## வத்திக்கான் பொதுச்சங்கம் சித்திபெறச் செபிக்கும்படி அங்கிளிக்கன்சபை அத்தியட்சகுரு தமது சனபயினரைக் கேட்டுள்ளார்

வத்திக்கான் பொதுச்சங்கம் சித்திபெறக் கத்தோலிக்கருடன் சேர்ந்து செபிக்கும்படி அங்கிளிக்கன்சபைத் தலைவராகிய கன்ரபுரியின் அத்தியட்சகுரு தமது சபையைச்சேர்ந்த கிறிஸ்தவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். வெஸ்ற்மினிஸ்றரில் கூடிய மகாநாட்டின்போதே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

"வத்திக்கானில் பரிசுத்த பாப்பரசரையும், கருதினுல் பெயா ஆண்டகையையும் சந்தித்ததிலிருந்து பல நல்ல விடயங்கள் எனக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை எனக்கு உதவியாயிருக்கின்றன. ஒருசில விடயங்கள் அசாதாரணமானவையாய்த் தோன்றுகின்றன என்று தமது உரையில் குறிப்பிட்டார் அத்தியட்சகுரு.

"மேலும் அவர் பேசுகையில், பரிசுத்தபாப்பரசர் தமது ஞானமக்கள் அனைவரையும் கிறிஸ்து நாதரின் ஆரோகணத்திருநாளுக்கும் இஸ்பிரீத்துசாந்து திருநா

[ தொடர்ச்சி 8-ம் பக்கம் ]

## பாப்பரசரின் முன்மாதிரிகை

15 வயதிலிருந்தே எமது பரிசுத்த தந்தை 23-ம் அருளப்பர் பிரிவினைக் கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காகவும், திருச்சபையின் அபிவிருத்திக்காகவும் மன்ருடி வந்திருக்கிருர். வத்திக்கான் பொதுச்சங்க வேதப்பரப்புதல் குழுவினருக்கு இத்தகவலைப் பாப்பரசர்தாமே தெரிவித்தார்.

## 5 இந்திய-சீன மேற்றிராணிமாருக்கு பாப்பரசர்கையால் அபிஷேகம்

பரிசுத்த பாப்பரசர் சம்பேதுரு வானவர்ஆலயத்தில் இஸ்பிரீத்து சாந்துவானவர் திருநாளன்று (இம்மதி 21-ல்) இந்தியாவினதும், சீனுவினதும் புதிய மேற்றிராணிமார் ஐவரை அபிஷேகம் செய்யவிருக்கின்ருர். இவர்களுடைய பெயர்கள் வருமாறு:

1. அதிவந். பியூஸ் ஹேர்கற்ரு, எஸ். ஜே. (அண்மையில் ராஞ்சியின் அதிமேற்றிராணியாராக நியமிக்கப்பட்டவர்).

2. அதிவந், வில்லியம் கோமஸ் (இவர் பம்பாயின் புதிய உதவி மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டவர்).

3. அதிவந். இஸ்ரனிஸ்லாஸ் லோக்குவாங் (இவர் வத்திக்கானிலுள்ள சீனதேசத்தின் தூதுவருக்கு ஆலோசகராகக் கடமையாற்றியவர்).

4. அதிவந். பீற்றர் பாவோசின்ரு (இவர் வேதப்பரப்புதல்சங்கச் சர்வகலாசாலையின் பொதுக் காரியதரிசியாகக் கடமையாற்றியவர்).

5. அதிவந். யோசப் ரியான்சியான் (இவர் அர்ச். சாமிநாதர் சபையைச் சேர்ந்தவர்). மூன்று சீன மேற்றிராணிமாரும் போர் மோசாதீவிலுள்ள மூன்றுமேற்றிராசனங்களுக்கு அதிபர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். அபிஷேகம் பெறவிருக்கும் ஐந்துமேற்றிராணிமார்களுள் மூவர் (2,3,4) உரோமாபுரியிலுள்ள வேதப்பரப்புதல் குருமடத்தின் பழைய மாணவர்களென்பது குறிப்பிடத்தக்கது.

## எலிசபெத் இராணியார் பாப்பரசரைத் தரிசித்தார்

பிரித்தானிய அரசி எலிசபெத் இத்தாலியில் ஒருவாரம் சுற்றுப் பிரயாணம் செய்தபோது தமது நாயகரான எடின்பரோ கோமகனுடன் பரிசுத்த பாப்பரசரைப் பேட்டிகண்டார். பேட்டி சுமார் 20 நிமிஷம் நீடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்களின் பரோபகாரி

மின்னுமல் முழங்காமல் இடி இடித்த வாறுகத் தம் தாய்நாடு செல்லும் வழியில் ஒரிருமாதங்களின்முன் எம்மத்தியிவிருக்கக் கிடைத்த சிலமணித்தியாலங்கள் போதாததைக்கண்டு வருந்திவெகு விரைவில் மீண்டும்வந்து ஒருசில வாரங்களாவது எம்முடன் கழிப்பதாக விடைபெற்றுச் சென்ற எமதுபிதா வண. லோங்சுவாமியாரவர்கள் ஏப்ரில்மாதம் 29-ந்திகதி லண்டன் மாநகர் வைத்தியசாலையொன்றில் திடீரெனக் காலமானுர் என்ற துயர செய்தியைக் கேட்டதும் அகில இலங்கையும், முக்கியமாக யாழ்ப்பாணம் முழுவதுமே, பேரதிர்ச்சியடைந்தது.

அமலோற்பவ மரியகாயகியின் பரித்தியாகிகள் சபையிற் சேர்ந்து இளவயதிலேயே தேவதொண்டிற்கெனத் தம்மை அர்ப்பணித்த இவர் தமது இருபத்திஞலாவது பாரயத்திலேயே ஆன்ம ஈடேற்ற தொண்டாற்றும் நோக்குடன் இலங்கை மண்ணில் அடியெடுத்து வைத்ததும், நம் தமிழ்நாடு செய்த தவப்பயனின் விளைவாக யாழ்ப்பாணப்பகுதிக்கனுப்பப்பட்டார். அன்று வாலிப மிடுக்குடனும், ஆன்ம ஈடேற்றத்துடிப்புடனும் யாழ்நகருள் புகுந்த அவர் தமது உயிர் உடல் ஆவி முழுவதையும் சாதிமதபேதமின்றி யாழ்ப்பாணத்தாருக் கர்ப்பணித்துத் தமது வாலிபப்பராயம்பூராவும் (33வருடங்கள்) அயராதுழைத்தார்.

வேதப்பரப்புதல் தொண்டில் ஏனைய ஐரோப்பிய நாடுகளின் முன்னணியில் நிற்கும் பழம்பெரும் கத்தோலிக்க நாடான அயர்லாந்தில், தமது புத்திர இரத்தினங்கள் அத்தனையையும் குடும்பத்துடன் தேவதொண்டிற்கு அர்ப்பணித்த சேவாபிமானப் பழம்பெருங் குடியில் இரண்டாவது புதல்வராகப் பிறந்தவர்தான் வண. ரிமொதி லோங் அவர்கள். குருப்பிரசாதிகளான அவரது இருசகோதரர்களும், கன்னியாஸ்திரியான ஒரேஒரு சகோதரியும் தாய் நாட்டிலேயே கல்லூரித்தலைவராயும், மடாதிபதிகளாயும் அளப்பரும் நற்தொண்டு புரிகின்றனர்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில் தலைசிறந்த கல்விஸ்தாபனமாக விளங்கிய சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வித்துறையில் முக்கியமாக உழைக்க இவர் நியமிக்கப்பட்டாலும், அக்கல்லூரி அதிபராகத் தொண்டாற்றிய நீண்ட காலத்தில் அவரது ஆழ்ந்த அறிவும், அபார ஞானமும், சீரியபண்பாடும், தெவிட்டா நாவன்மையும், கவர்ச்சிகரத்தோற்றமும், நாட்டின் பல்வேறு தலைவர்களையும் காந்தம்போல் அவரண்டை ஈர்த்துவிட, மறுத்துக்கூறும் சக்தியிழந்து மகுடிக்குக் கட்டுண்ட நாகம்போலிருக்கும் அவர்களின் ஒத்துழைப்பை ஒருங்கே பெறவல்ல தனது தனிப்பெரும் ஆற்றலை உபயோகித்து, அவர் ஆற்றிய நற்சேவைகள் எத்தனை? அவரைப்போன்றே அவர் வகுத்த திட்டங்களும் பிரமாண்டமானவை, வானளாவியவை.

கேம்பிறிட்ஜ் பட்டதாரியான இவர் பூரண பண்பாடுள்ள மனிதனை உருவாக்குவதில் "வாசிவை" எவ்வளவு முக்கியம் என்பதை நன்கறிந்ததன் விளைவாக உருவாகியதுதான் இன்று நாம் காண யாழ்நகரின் மத்தியில் வானளாவ நிமிர்ந்து நிற்கும் நூல்நிலையமாகும். முற்றத்துறந்த ஓர் துறவியாயிருந்தும் இப்பிரமாண்டமான நூல்நிலையத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய நிதியில் பெரும்பகுதியைத் திரட்டிக் கொடுத்துதவினுர் என்றுல், அவரின் தன்னலமற்ற சமூகசேவையை என்னென்பது!

அவரது நாவசைய நாடசைந்த காலம் அந்தக்காலம். காலைதொடக்கம் மாலைவரையும் அவரது அலுவலகத்தை முற்றுகையிட்டு நாடு பூராவும் அவருக்கிருந்த செல்வாக்கைத் தத்தம் உத்தியோக வேட்டைக்குபயோகித்த வாலிபர் தொகை எம்மாத்திரம்! கல்லூரிப் படிப்பைக் காற்றிலே பறக்கவிட்டுக் கட்டுக்கடங்காக் காளைகளாய்த் திரிந்த பிள்ளைகளால் மனமுடைந்து ஆறுதல் தேடி அடைக்கலம் நாடிய பெற்றேர் தொகை எம்மட்டு! நயத்தாலும், பயத்தாலும் இவரால் நல்வழியில் நிறுத்தப்பட்ட இளவல்கள் எத்தனை பேர்!! இந்துக்கள் கிறிஸ்தவர்கள் முஸ்லீம்கள் என்ற பாகுபாடின்றி வரையாது உதவிய இத்தகைய செல்வாக்குப்படைத்த ஓர் வள்ளல் யாழ்நகரில்—தமிழகத்திலிருந்தார் என்றுல் அது நம் தமிழ்த்தாய் செய்த தவப்பயனேயாகும்.

வண. பிதாலோங் அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வெளியிலும் சாதிமத வேறுபாடின்றிச் சகலவித தலைவர்களுடனும் மதகுரு என்ற வேற்றுமை பாராட்டாது வாழ்ந்து வந்த செல்வாக்கு நிறைந்த காலத்திலும், தமது துறவறவாழ்வின் குறிக்கோளை—ஆன்ம ஈடேற்ற வேலையை—என்றும் மறந்ததில்லை. அவரில் ஆழமாக வேரூன்றியிருந்த திரு இருதயப் பத்தி, திவ்விய பூசைப்பத்தி, திருச்செபமாலைப்பத்தி அக்காலத்தில் சம்பத்திரிசியார் கல்லூரியில் புதுமெருகுடன் புகுத்தப்பட்டது. எத்தகைய வேலைகள் மத்தியிலும் தானே முன்னின்று கல்லூரி ஆரம்பிப்பதற்குமுன் ஐம்பத்து மூன்றுமணிச் செபமாலையை மாணவர்களுடன் சேர்ந்து சொல்லும் நற்பழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் அவரே. கல்லூரிமாணவர் அத்தனை பேரையும் விசேஷமாகச் சிரேஷ்ட வகுப்புகளில் பயிலும் வாலிபர்கள் ஒவ்வொருவரையும் கண்காணித்துப் போதனையாலும் சாதனையாலும் கல்லூரியில் அவர்களின் சன்மார்க்க வாழ்விற்கடிகோலுவதுடன் நின்றுவிடாது அவர்கள் நாட்டின் எப்பகுதியில் இருந்தாலும் அங்கங்கும் அவர்களின் முன்னேற்றத்திலும், நல்வாழ்விலும் ஆன்மவிஷயத்திலும் அக்கறைகாட்டி, அவர்களைப் பின்தொடர்ந்து அயராதுழைத்த நற்பிதா அவர் என்றே கூறலாம்.

இற்றைக்கு ஏழு ஆண்டுகளுக்குமுன் தமிழ்மக்கள் ஏங்கிநிற்க, யாழ்நகரோர் கண்ணீர் சொரிந்துநிற்க, அவரது செல்வாக்கின் பயனைப் பெரும்பாக்கியம் தங்களுக்குக் கிட்டவில்லையேயெனச் சிறுவர்குழாம் கலங்கி அணிவகுத்து நின்று அஞ்சலி செய்ய மலர்ந்த முகத்துடன், ஆனல் பிரிவுத்துயருடன் சென்ற குரவர் அவுஸ்திரேலியாவில் இருக்கிறுர் என்று எம்மைத் தேற்றினேம். மூன்றுபத்துவருடசேவையை யாழ்ப்பாணம் பெற்றது. ஆனல், ஒருபத்துவருட சேவையைமுதலாய்ப்பெற அவுஸ்திரேலியா கொடுத்து வைக்கவில்லை. தமிழர் நலனே தன்நலனெனப் பாடுபட்டதியாகி மறைந்துவிட்டார். நிறத்திலும் மொழியிலும் வேறுபட்டாலும் ஒரே தாய்வயிற்றுப் பிள்ளைகள்போல் தமிழனேடு தமிழனுய் வாழ்ந்த "அயர்லாந்து தமிழன்" ஈசனடி சேர்ந்துவிட்டார். அமலோற்பவ மரியன்னை சபையினரின் ஆன்ம ஈடேற்றவிடாயும், யேசுசபையினரின் கல்வி ஞானமும், றெடெம்றிஸ்றுக்குரிய பிரசங்க ஆற்றலும் ஒருங்கே பெற்ற இம்மாபெரும் குரவரின் மறைவு அமலோற்பவ மரியன்னைசபையின் மாபெரும் நஷ்டமென்றே கூறலாம். இப்பரோபகாரியின் பூதவுடல் அழிந்தாலும், இலங்கை வரலாற்றில் சம்பத்திரிசியார் கல்லூரிச் சரித்திரத்தில் இவரது புகழுடல் ஒருபோதுமே அழியாது.

R. J. P.

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

இல. M. B. 3242

## யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில்

புன்னலைக்கட்டுவன்
வைரவப்பிள்ளை நாசிங்கம்
— வழக்காளி.

எதிராக

சிறுப்பிட்டி

1. காலஞ்சென்ற அருணசலம் செல்லத்துரையும்,
2. பெண் சின்னம்மாவும்.

சிறுப்பிட்டி

3. காலஞ்சென்ற அருணசலம் செல்லத்துரையின் ஆதனத்துக்குச் சட்டப்படி பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட அருணசலம் செல்வராசா
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3242-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் பத்துத் துண்டுக் காணிகள் 1961-ம்ஆ ஆனிமீ 14-ந்உ (14-6-61) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 7,970-ம், இதற்குத்தீர்வைரூபா5,000-க்கு 8-2-60திகதிதொடக்கம், 21-10-60வரை 100-க்கு 7வீத வட்டியும், பின் முழுத் தொகையும் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா459-09.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம்டிஸ்திறிக் வலிகாமம் கிழக்கு, புத்தூர் கோயிற்பற்று, சண்டிலிப்பாய் இறை "கலிலாஞ்சிசீமா" பரப்பு நிலஇலாச்சம் 9½ யும், வீடும், கிணறும், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—சிறுப்பிட்டி வலிம்புலத்த சிவகாமியம்மன் கோவிலுக்குரிய காணியும், கனகர் பெண் பொன்னுப்பிள்ளைக்குமுரிய காணியும். வடக்கு—ஒழுங்கை. மேற்கு—ஒழுங்கையும், ஐயம்பிள்ளை பெண் நன்னிப்பிள்ளைக்கும், இளையதம்பி பெண் தங்கத்துக்கும், பங்காளருக்குமுரிய காணிகள். தெற்கு—மேற்காட்டிய சிவகாமியம்மன் கோவிலுக்குரிய காணி. இதில் மேற்புறமாகப் பெரிய வீட்டிலறையும், குசினியும் இதடங்கலில் சொரியலாய் அரைவாசி. பயிர்களும், கிணறும.

2. மேற்படிஇறை "அணிஞ்சில்திடல்" பரப்பு நிலஇலாச்சம் 6¾. எல்லை: கிழக்கு—சின்னத்தம்பி பெண் மாணிக்கத்துக்கும், அம்பலவி விஞசித்தம்பிக்குமுரிய காணிகள். வடக்கு—செல்லையா பெண் செல்லாச்சிக்கும், கார்த்தி பெண் பொன்னுவுக்கும், பங்காளருக்குமுரிய காணிகள். மேற்கு — கனகரத்தினம் பெண் மூத்துப்பிள்ளைக்கும், சிறுப்பிட்டி வல்லயம்புலம் விக்கினேஸ்வர சுவாமி கோவிலுக்குமுரிய காணி. தெற்கு—குளம் இது அடங்கலும்.

3. மேற்படி கோவிற்பற்று, புத்தூர் இறை "உயலைத்தோட்டம்" பரப்பு நில இலாச்சம் (7) ஏழு. எல்லை: கிழக்கு—செல்லப்பா பெண் பார்வதிப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய காணி. வடக்கு—சின்னத்தம்பி பெண் மாணிக்கத்துக்குரிய காணி. மேற்கு—அம்பலம் விநாசித்தம்பிக்குரிய காணி. தெற்கு — மூத்ததம்பி சின்னத்தம்பிக்கும், மூத்ததம்பி கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்கும் உரிய காணிகள். இது அடங்கலும் கிழக்குப்பக்கமாக இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும், வழமையான வழிவாய்க்கால் பாவிப்பு உரித்தும்.

4. மேற்படி "பறையன்கலட்டி" நிலஇலாச்சம் 3. வடலிகளும். எல்லை: கிழக்கு—பொன்னையா பெண் இளையபிள்ளைக்குரிய காணி. வடக்கு — அம்பலம் நிலையினருக்கும் சகோதரங்களுக்கும் உரிய காணி. மேற்கு—அம்பலம் விநாசித்தம்பிக்குரியகாணி. தெற்கு—வேலுப்பிள்ளை கைம்பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய கரணி. இது அடங்கலும்.

5. மேற்படி இறை "காக்கை" பா. நிலஇலாச்சம் 3-ம், கிணறும். எல்லை: கிழக்கு—வைரவநாதர் இராமலிங்கத்துக்கும், பங்காளருக்கும்உரிய காணி வடக்கு—மாணிக்கர் பெண் சின்னப்பிள்ளைக்குரிய காணி. மேற்கு—கணவதிப்பிள்ளை பெண் [illegible] ய காணி. தெற்கு—செல்லப்பா பெண் பார்வதிப்பிள்ளைக்கு உரிய காணி. இது அடங்கலும்.

6. மேற்படி இறை "வராக்கொம்புறை" பரப்பு நிலஇலாச்சம் 10. எல்லை: கிழக்கு — சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளைக்குரிய காணி. வடக்கு—வல்லிபுரம் பெண் புன்னுத்தம்பிள்ளைக்கும், பங்காளருக்கும்உரிய காணி. மேற்கு—இலகர் வைகம்பெண் குஞ்சிப்பிள்ளைக்கும், பங்காளருக்குமுரியகாணி. தெற்கு — கணவதி சண்முகத்துக்கும், பங்காளருக்குமுரிய காணி இதடங்கலில் சொரியலாய் ¼ பங்கும்.

7. மேற்படி சிறுப்பிட்டிஇறை "மலையன் சீமை" பரப்பு நிலஇலாச்சம் 5-ம், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை: கிழக்கு—முதலித்தம்பி இளையதம்பிக்கும், மறுபேருக்குமுரிய காணிகள். வடக்கு—சிதம்பரப்பிள்ளை பெண் சின்னக்குட்டிக்கும், பங்காளருக்குமுரிய காணி. மேற்கு—வல்லிபுரம் பெண் புன்னுத்தம்பிள்ளைக்குரிய காணி. தெற்கு—வல்லிபுரம் பெண் பார்வதிப்பிள்ளைக்கும், கணவதிப்பிள்ளை பெண்பார்வதிப்பிள்ளைக்கும், முருகர் வேலுப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரிய காணிகளும், ஒழுங்கைமுகப்பும். இது அடங்கலும்.

8. மேற்படிஇறை "பன்னலை" பா. நிலஇலா. 5¼-ம், கிணறும், வீடும், வான்பயிர் செய்பயிர்களும், பனைகளும். எல்லை: கிழக்கு—சின்னவன் கதிரனுக்குரியகாணி. வடக்கு — எல்லிப்போலையன் பெண் பொன்னிக்கும், மறுபேருக்குமுரிய காணிகள். மேற்கு—மூத்ததம்பி வாரித்தம்பிக்கும், சகோதரங்களுக்குமுரிய காணி. தெற்கு—ஒழுங்கை. இது அடங்கலில் சொரியலாய் அரைவாசி.

9. மேற்படிஇறை "கிராவி" பரப்பு செல்லுஇலாச்சம் 6. எல்லை: கிழக்கும், வடக்கும்—நாகமுத்து பெண் யோகப்பிள்ளைக்கும், பங்காளருக்கும் உரியகாணி. மேற்கும், தெற்கும் — மூத்ததம்பி அருணசலத்துக்குரிய காணி. இது அடங்கலும்.

10. மேற்படி புத்தூர்தெற்கு "உயக்தத் தோட்டமும், நிலமும்" பரப்பு நில இலாச்சம் 3½. எல்லை: கிழக்கு—கந்தையா பெண்தெய்வானைப்பிள்ளைக்கும், விநாயர் வல்லிபுரத்துக்குமுரிய காணிகள். வடக்கு — மூத்ததம்பி பெண் தெய்வானைப்பிள்ளைக்குரிய காணி. மேற்கு—கந்தையா பெண் சோதிப்பிள்ளைக்குரிய காணி. தெற்கு—இளையதம்பிபெண் தெய்வானைப்பிள்ளைக்கும், பங்காளருக்குமுரிய காணி. இது அடங்கலும். கிழக்கு எல்லைக் காணிக்குள் இருக்கின்ற கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்கால் பாவிப்புரித்தும்.

பதிவு இல. $\frac{K.75}{17\text{-}21} + \frac{75}{23\text{-}26} + \frac{65}{267}$

கி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
விதானைவளவு, சித்தன்கேணி,
9-5-61.



## 23-ம்வருட ஞாபகம்

வண. எஸ். ஏ. பெஞ்சமின்சுவாமி அவர்கள் இவ்வுலகைநீத்த 23-ம்வருட ஞாபகமாக இம்மாதம் 13-ந்திகதி சனிக்கிழமை வதிரி, அர்ச். அந்தோனியார் தேவாலயத்தில் மரித்தோர் பாடற்பூசை ஒன்று நடைபெற்றது. அன்றுதினம் வண. குருப் பிரசாதிகள், சங். சந்நியாசிகள், கன்னியாஸ்திரிகள், மற்றும் விசுவாசிகள் சகலரும் அன்னாரது ஆன்மஇளைப்பாற்றிக்காக எல்லாம்வல்ல இறைவனை இரந்து மன்றுடியிருப்பார்களென நம்புகிறேன்.

வ. லூக்கேஸ்பிள்ளை
வதிரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டுச் செய்திகள்

## பண்டாரநாயக்கா கொலைவழக்கு

சுப்பிறீங்கோட்டிலே நீதியரசர் ரி. எஸ். பெர்னுண்டோமுன்பாகச் சென்ற மாசிமாதம் 22-ந்திகதி ஆரம்பமான பண்டாரநாயக்கா கொலைவழக்குவிசாரணை 53தினங்களாக நடைபெற்றுச் சென்ற10-ந்திகதியன்று முடிவடையலாயிற்று. இந்தவழக்கிலே மொத்தமாக 95சாட்சிகள் சாட்சியமளித்திருக்கிறார்கள். முதலாம்எதிரியான புத்தரக்கிததேரோவும், இரண்டாம் எதிரி எச். பி. ஜயவர்த்தனவும், நான்காம் எதிரியான சோமராமதேரோவும் குற்றவாளிகளென்று யூரிமார்ஏகமனதாகத் தீர்மானித்தனர். மூன்றும்எதிரியான அநுரா டிசில்வாவும், ஐந்தாம் எதிரியான இன்ஸ்பெக்றர் நியூட்டன் பெரேருவும் சுத்தவாளிகளாகி விடுதலையடைந்தனர். சோமராமதேரோ பண்டாரநாயக்காவைக் கொலைசெய்ததிலும், கொலைக்குச் சதிசெய்ததிலும் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டார். புத்தரக்கிததேரோவும், ஜயவர்த்தனவும் கொலைக்குச்சதிசெய்ததில் குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டனர். மூவருக்கும் மாணதண்டனைவிதிக்கப்பட்டு முதலாம்எதிரி ஆனிமாதம்20-ந்திகதியும், இரண்டாம்எதிரி அம்மாதம் 21-ந்திகதியும், மூன்றும்எதிரி அம்மாதம்22-ந்திகதியும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தூக்கிலிடப்படவேண்டுமெனத் தீர்ப்பாயிற்று. மூன்றுஎதிரிகளும் தங்களுக்குவிதிக்கப்பட்ட மாணதண்டனையை ஆட்சேபித்துச்சென்றவெள்ளிக்கிழமை அப்பீல் செய்திருக்கிறார்கள்.

## மற்றொரு விசேஷயாத்திரை

கொழும்பிலிருந்து வருகிறஆவணிமாதம் 18-ந்திகதிவெள்ளிக்கிழமை மற்றொருவிசேஷதிருயாத்திரைக் கோஷ்டியானது உலகின் அதிகம்புதியதும், மகாப்பாரியதுமான 'கன்பெரு' என்ற பிரயாணக்கப்பலிலே ஐரோப்பாவுக்குப் புறப்பட்டுச்செல்லவிருக்கிறது. இந்தக்கோஷ்டியினரும் முந்திய இருயாத்திரைக்கோஷ்டிகளைப்போலவே பல்வேறுநாடுகள், நகர்களில் சுற்றுப்பிரயாணஞ்செய்து, பல்வேறு திருசேத்திரங்களையும் தரிசித்துத்திரும்புவர். ஐரோப்பிய, பரிசுத்தநாட்டுச் சுற்றுப்பிரயாணங்களைத் தன்னந்தனிமையாக அணிவகுத்துநடத்துவதில் பிரஸ்தாபம் பெற்றவரான திரு. டி. எம். ஹெற்றியாராச்சிஅவர்களே இந்த யாத்திரைக்கான ஒழுங்குகளையும் செய்துவருகின்றார். முந்திய இருதிருயாத்திரைகளையும்போல இதனையும் அவரேவழிநடத்தவிருக்கின்றார்.

## பர்மாவும் புத்தகுருமாரும்

"பர்மாவிலே புத்தகுருமார் கைவசம் பணத்தைக்கொண்டிருக்கவோ, அன்றேல் ஆஸ்திபாஸ்திகளைச் சொந்தமாகக் கொண்டிருக்கவோ, அல்லது அரசியல்விஷயங்களில் கலந்துகொள்ளவோகூடாது; இவ்வாறிருப்பதாலே பர்மியமக்களால் அவர்கள்பெரிதும் மதிக்கப்படுகிறார்கள்" என்று இலங்கையிலுள்ள பர்மியஸ்தானிகர் டக்றர் ஹிற்றின் ஒங் அவர்கள் சென்ற11-ந்திகதியன்று மஹாறகமவைச்சேர்ந்த பொறலெஸ்கமுவா எனுமிடத்தில் நடைபெற்ற சாசன சேவகா சங்கத்தின் நான்காம்ஆண்டு விழாவில்பேசியபோது தெரிவித்திருக்கின்றனர்.

## புதியகாரியாதிகாரிகள்

புதியகாரியாதிகள் (டி. ஆர். ஒ) 21 பேரை நியமனஞ்செய்வதைக் கைத்தொழில்—உள்நாட்டு—கலாசார மந்திரி காரியாலயம் சிபாரிசுசெய்துள்ளது. அதனால்இதற்கெனப் போட்டிப்பரீட்சைஒன்று சமீபத்திலே நடைபெறவிருக்கிறது. கீழ்நாட்டுச்சிங்கள, கண்டிச்சிங்கள, தமிழ்ப்பகுதிகளில் காரியாதிகளுக்கான 2 இடங்கள் காலியாயிருக்கின்றன.

## புதியவரவுசெலவுத்திட்டம்

பாராளுமன்றதொடர்கூட்டம் வருகிறஆனிமாதம் 1-ந்திகதியன்று கலைக்கப்படும். அம்மாதத்தில் பாராளுமன்றம் கூடமாட்டாது. ஆடிமாதம் 11-ந்திகதியன்று சிம்மாசனப்பிரசங்கதினமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரசங்கம்பற்றியவிவாதத்துக்குப் பிரதிநிதிகள்சபையில் 17-ந்திகதிமுதல் 21-ந்திகதிவரை ஐந்துதினங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. வருகிறஐப்பசிமாதம்1-ந்திகதி ஆரம்பமாகும் புதிய நிதிவருடத்துக்குரிய வரவுசெலவுத்திட்டத்தைச் சபையிலே நிதிமந்திரி ஆடி26-ந்திகதியன்று சமர்ப்பித்து மறுநாள் அதுபற்றிய தனதுபேச்சை நிகழ்த்துவார். வரவுசெலவுத்திட்ட விவாதம் ஆவணி8-ந்திகதி ஆரம்பமாகி ஏழுதினங்களாக நடைபெறும். ஆவணிமாதம்16-ந்திகதியன்று சபையிலே இரண்டாம்முறையாக வாசிக்கப்படும்.

## பதினைந்து வருடம் செல்லும்

மகாவலிகங்கையை வடக்குப்பக்கமாக வடமத்திய மாகாணத்திற்குத் திருப்பும்திட்டம் பூர்த்தியாகப் பதினைந்துவருடஞ்செல்லுமென அமெரிக்கஎஞ்ஜினியர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இத்திட்டம் பகுதிபகுதியாகவே பூர்த்திசெய்யப்படும். ஆனால், மகாவலிகங்கைத் திட்டத்திற்கு அமெரிக்கஅரசாங்கம் பணஉதவிசெய்வதாக எந்தவிதமான வாக்குறுதியும் அளிக்கவில்லையென்றும், இலங்கைஅரசாங்கமும் இதுவிஷயமாய் அமெரிக்கஅரசாங்கத்தைக் கேட்கவுமில்லையென்றும் சொல்லப்படுகிறது.

## பாடசாலைப் பிள்ளைகளின் சுகாதாரம்

இலங்கைப் பாடசாலைப்பிள்ளைகளில் ஐம்பதுசத விகிதமானவர்கள் விசேஷவைத்தியசிகிச்சை செய்யப்படவேண்டியிருக்கிறார்களென்று பாடசாலைச் சுகாதார குழுவொன்றுல் சமீபத்தில்நடத்திய ஆராய்ச்சிமூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அவர்களின் பொதுவானநோய்கள் கண், காது, மூக்கு, தொண்டை, பல் சம்பந்தப் பட்டனவென்றும், அவற்றிற்கு முக்கியகாரணம் போஷணைக்குறைவேயென்றும் அறியப்பட்டுள்ளது. நகர்களுக்கு வெளியேவசிக்கும்பிள்ளைகள் பல்வேறு குடர்சம்பந்தமான நோய்களால் வருந்துகிறார்களென்றும், அதற்குக்காரணம் அசுத்த தண்ணீரேயென்றும் கண்டறியப்பட்டிருக்கிறது. அதனால் பாடசாலைச் சுகாதாரஅதிகாரிகள் நோய்கண்ட பிள்ளைகளுக்குச் சிகிச்சையளிக்கத் திட்டமிட்டுவருகின்றார்கள்.

## இருதிருயாத்திரைக் கோஷ்டிகள்

ஆடவர்களையும், பெண்மணிகளையும் கொண்ட இருதிருயாத்திரைக் கோஷ்டிகள் இவ்வாரத்தில் ஐரோப்பாவுக்குப் பிரயாணமாகியுள்ளன. இவற்றிலே 11ஆடவர்களையும், 13பெண்மணிகளையும்அடக்கிய முதலாவது திருயாத்திரைக்கோஷ்டி இம்மாதம் 17-ந்திகதியாகிய சென்றபுதன்கிழமை விமானமூலம் பிரயாணமாயிற்று. 5ஆடவர்களையும், 8பெண்மணிகளையும் அடக்கிய இரண்டாவது திருயாத்திரைக்கோஷ்டி எஸ். எஸ். [illegible] எனும் கப்பல்மூலம் இம்மாதம்14-ந்திகதியாகிய சென்றஞாயிற்றுக்கிழமை பிரயாணமாகியுள்ளது. இந்தயாத்திரைக்கோஷ்டிகள் நேப்பிள்ஸ், ரோம், அசிஸி, பதுவை, வெனிஸ், லூர்து, பரீஸ், லண்டன், மற்றும்பலநகர்களிலும், ஆஸ்திரியா, ஜேர்மனி, சுவிற்சர்லாந்து, பெல்ஜியம், ஒல்லாந்துமுதலாம் நாடுகளிலும் சுற்றுப்பிரயாணஞ்செய்து, ஆங்காங்குள்ள பிரபலதிருசேத்திரங்களைத் தரிசித்துக்கொண்டு திரும்பும்.

## பெர்துத்தராதர பத்திரப்பரீட்சை

சென்ற1960-ம்ஆண்டின் மார்கழியில் 921மத்தியதானங்களில் நடந்தேறிய ஜி. சி. ஈ. எனப்படும்பொதுத்தராதரபத்திரப் (சாதாரண) பரீட்சைக்கு 1,23,300 பரீட்சார்த்திகள்—அதாவது முந்தியவருடத்திலும் 10,000பேர் கூடுதலாகச் சென்றிருக்கிறார்கள். 1959-ம்ஆண்டின் மார்கழியிலே 801 மத்தியதானங்களில் நடைபெற்ற இப்பரீட்சைக்குச்சென்றிருந்த பரீட்சார்த்திகள் 1,14,500பேராவர். எஸ். எஸ். சி. தராதரப்பத்திரம் நீக்கப்பட்டதோடு 1960-ம்ஆண்டின் மார்கழிமாதப்பரீட்சைக்குமுன் செய்யப்பட்டுவந்ததுபோல் இனிமேல்பரீட்சார்த்திகளிலே சித்திபெற்றவர்களையும், சித்திபெறாதவர்களையும் வித்தியாபகுதி பிரித்துப்பரீட்சைமுடிவுதெரிவிக்கமாட்டாது. சென்றமுறை இப்பரீட்சைக்குச்சென்ற 1,23,300பரீட்சார்த்திகளில் ஒவ்வொருவரும் சித்தியடைந்த குறித்தபாடங்களுக்கே தாரதரப்பத்திரம் வழங்கப்படுவார்கள்.

## கிணற்றில்விழுந்த மோட்டர்சைக்கிள்காரர்

கொழும்பிலிருந்து சென்றவெள்ளிக்கிழமை இரத்தினபுரிக்கு ஒருமோட்டர்சைக்கிளில்சென்ற டபிள்யு. எம். எஸ். சக்திரதாசஎன்பவர் தனதுசைக்கிளைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமற்போகவே அது ஓடிச்சென்று ஒருமரத்தில்மோதியதும் அவர் பாலம் ஒன்றுக்குச் சமீபமாய்த் தெருவின் பக்கமாயிருந்த ஒருகிணற்றில் வீசப்பட்டார். இவர் உடனேதானே கிணற்றிலிருந்து தூக்கியெடுக்கப்பட்டு அறிவு நினைவற்றநிலைமையில் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அதேநிலைமையில்தானே இன்னமும் இருந்துவருகிறார். இவர் ஒருறெயில்வே அண்டர்காட். இவருடன் மோட்டர்சைக்கிளின்பின்கலணையில்உட்கார்ந்துசென்ற எம். கொடித்துவக்குஎன்பவர் கால்ஒன்றுமுரிந்து அதேஆஸ்பத்திரியில்தானே இருந்துவருகின்றார்.

## சீதனமுறை ஒழிப்பு மசோதா

இந்தியபாராளுமன்றம் நிறைவேற்றிய சீதனஒழிப்புச் சட்டம்போன்று இலங்கையிலும் அரசாங்கம் ஒருமசோதாவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவரவேண்டுமென்ற ஒருகிளர்ச்சி அரசாங்ககட்சி அங்கத்தவர்களிடையே பிறந்திருக்கிறது. இது சம்பந்தமாய் அக்கட்சியைச்சேர்ந்த யட்டிநுவரைப் பிரதிநிதி திரு. யு. பி. வீரசேகரா சனப்பிரதிநிதிகள்சபையில் ஒருபிரேரணை கொண்டுவரவிருக்கின்றார். இதன்படி சீதனம்கொடுப்பது மாத்திரமல்ல, அதைப்பெறுவதும் சட்டவிரோதமாகும்.

## ஆறுகோடிரூபா குறைந்தது

கொப்பரு, தேங்காயெண்ணெய், தேங்காய்ப்பூவாகிய பிரதான தெங்குவிளைபொருட்களின் ஏற்றுமதிவிலை முந்தியவருடத்திலும்பார்க்கச் சென்ற 1960-ம்ஆண்டில் ஆறுகோடிரூபாவால் குறைந்துள்ளது. இதற்குக்காரணம் ஏற்றுமதித்தொகையில் வீழ்கையும், உலகசந்தையிலே விலையின்வீழ்கையுமாகும். 1960-ம்ஆண்டில் ஏற்றுமதியான மூன்றுவிளைபொருட்களினதும் விலை 18கோடியே 40இலட்சம்ரூபா. 1959-ம்ஆண்டில் 24கோடியே 40 இலட்சம்ரூபாவாகும்.



இளைப்பாறிய ஆசிரியை

ஸ்ரீமதி செசீலியா நல்லம்மா சாமுவேல்

அவர்களின்

### அமரதின நினைவு

### 20-5-61

அன்றுதினம் அன்னாரின் ஆன்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்படி அனைவரையும் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்: கணவர், மக்கள், மருகர், பேரர்.

ஜசிந்தா லொட்ஜ்,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | ம. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஓ. | ஒருசந்தி நாள் |

### வைகாசி மாதம் — 1961

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | ஞா. | 1 | பெந்தெக்கோஸ்து ஞாயிறு | (வி. ம.) | [சி] |
| 22 | தி. | 1 | பெந்தெக்கோஸ்து அட்டகத்தின் 2-ம்நாள் | (வி. ம.) | [சி] |
| 23 | செ. | 1 | ,, ,, ,, 3-ம்நாள் | (வி. ம.) | [சி] |
| 24 | பு. | 1 | ,, ,, ,, 4-ம்நாள் (சதுர்காலப் புதன்) | (வி. ம.) | [சி] |
| 25 | வி. | 1 | பெந்தெக்கோஸ்து அட்டகத்தின் 5-ம்நாள் | (வி. ம.) | [சி] |
| 26 | வெ. | 1 | ,, ,, ,, 6-ம்நாள் (சதுர்கால வெள்ளி) | (வி. ம.) | [சி] |
| 27 | ச. | 1 | ,, ,, சனி (சதுர்காலச் சனி) | (வி. ம.) | [சி] |

சத்திய வேத
பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
வைகாசிமாதம் 20-ந் திகதி

## என்றும் பிரியாததுணை

**"நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கின்றது. ஏனெனில், நான் போகாதிருந்தால் தேற்றுகிறவர் உங்களிடத்தில்வாரார்; நான்போவேனாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன்" என்று யேசுக்கிறீஸ்துநாதர் ஏலவே தமது சீடர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்தார்; வாக்கு நிறைவேறும்காலமும் வந்தது.**

யேசுநாதர் மரணத்தை வெற்றிகொண்டு பரலோகத்துக்கு ஆரோகணமான பத்தாம்நாள், "பெந்தக்கோஸ்து" என்னும் பெரிய திருநாள். அன்றுகாலை, ஜெருசலேம் நகரின் பெரிய அசனசாலையொன்றில் யேசுவின் சீடர்கள் அர்ச். மரியம்மாளுடனும், வேறுசில ஸ்திரீகளுடனும்செபத்தியானத்தில் ஆழ்ந்திருந்தனர்.

திடீரென வானமண்டலத்தில் ஒரு பெருமுழக்கமுண்டானது. அந்நேரத்தில்தானே, அசனசாலை முழுவதும் ஒளிவெள்ளம் பெருகியது. இஸ்பிரீத்து சாந்துவானவர் பிரிந்த அக்கினி நாக்கு ரூபமாக அறையிலிருந்த ஒவ்வொருவர்மீதும் இறங்கினார். வரப்பிரசாதத்தின் பொன்மாரி அவர்கள்மீது சோனாவாரியாகப் பொழிந்தது. அவர்கள் அகமும், முகமும், அறிவும் மலர்ந்தன. அச்சமும், அறிவீனமும் அகன்றன. அஞ்சாநெஞ்சம் பிறந்தது பக்திவேகம் கொழுந்துவிட்டெரிந்தது; புதுமைகள் புரியவும், தீர்க்கதரிசனங்கள் புகலவும், பல மொழிகளிற் பிரசங்கிக்கவும் சீடர்கள் அருள் பெற்றனர்.

திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் பிதாவிலும், சுதனிலும்நின்று புறப்படுகிறவர்; பிதாவுக்கும், சுதனுக்கும் சரியொத்தவர். பிதாவையும், சுதனையும் ஐக்கியப்படுத்தும் சிநேக பந்தனம். ஆராதனைக்குரிய பரமதிரித்துவத்தின் மூன்றாம்ஆள்.

சிலுவைப்பீடத்தில் அன்பின் மேலீட்டினால் எமக்காகப் பலியான யேசு இரட்சகரின் வரப்பிரசாதங்களைப் பகிர்ந்தருளுபவர் திவ்விய இஸ்பிரீத்து சாந்துவானவரே. மீட்கப்பட்டவர்களின் ஆத்துமங்களில் சுத்திகரச் செயல்களைச்செய்பவர் இவரே. செபத்தின் வழியாகவும், தேவதிரவிய அனுமானங்களின்மூலமாகவும் திரளான புனித வரங்களைப் பொழியும் ஞான மேகம் இவரே.

இஸ்பிரீத்துசாந்து சருவேசுரன் எமது இரட்சணியத்துக்கு இன்றியமையாதனவாகிய விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்னும் சுகிர்த புண்ணியங்களை நமது ஆத்துமத்திற்கு அளித்தருள்கிறார். உலகு, சரீரம், பசாசு என்னும் சத்துராதிகளின் சர்ப்பனைகளில்நின்றும் நம்மைக் காத்து நல்லுதவிபுரிகிறார். நாம் பாவத்தில் விழும்போதெல்லாம் நம்மை மனந்திருப்பி அறவழியிற்செலுத்துகிறார். எமது நிந்தை அவமானங்களிலும், துன்பதுரிதங்களிலும் நீங்காத்துணையாயிருக்கிறார். கவலையில் தேற்றரவையும், கலக்கத்தில் அமைதியையும், தளர்ச்சியில் மனோதிடத்தையும் தந்தருள்புரிகிறார். இத்தனை ஞானக் கொடைகளையும் தந்தருள்வதுபோதாதென்றாற்போல், அத்தியந்தபயவோடு நமது சரீரங்களைத் தமது ஆலயமாக்கிக்கொண்டு ஆத்தும விருந்தாடியாயிருக்கின்றார். சகல தேவவரங்களுக்கும் மணிக்கிரீடம்போல விளங்கும் நன்மரணவரத்தையும்நற்சித்தமுள்ளோர்க்குத் தந்துதவும் உபகாரியாக மிளிர்கின்றார். அருள்வேத பெந்தக்கோஸ்துப் பண்டிகை தினமுதல் திருச்சபையை நரகத்தின்வாசல் மேற்கொள்ளாதவாறு சத்தியத்தின் இஸ்பிரீத்து சாந்துவானவர் பாதுகாத்துவருகிறார். "கிறிஸ்துவானவர் திருச்சபையின் சிரசாய் இருப்பதுபோல, இஸ்பிரீத்து சாந்துவானவர் அதன் ஆன்மாவாய் இருக்கிறார்."

அப்போஸ்தலரின் கிரீடாதிபதியாகிய இராயப்பரிடமாய்ப் பரிசுத்த பாப்பரசர்களையும், அப்போஸ்தலரிடமாய் மேற்றிராணிமாரையும், திருச்சபைத்தாயின் மடியில் வேதபாரகரையும், சுத்தவாளரையும், வேதசாட்சிகளையும் எழுப்பிப் பரிபாலிக்கும் தமதிரித்துவத்தின் மூன்றாம்ஆளாகிய திவ்விய இஸ்பிரீத்துசாந்துசருவேசுரனின் திருநாளைத் திருச்சபை இம்மாசம் 21ஆம் திகதி வெகுபக்தியருட்சியுடன் கொண்டாடுகின்றது.

இப்பொற்றினத்திலே அனைத்துலக மக்களும் திருச்சபையின் ஒன்றிப்பிலே சேர்ந்து, மீட்பின் பயனை அடைய வேண்டுமென்ற புனித நோக்கிற்காகத் திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவரை வேண்டுவோம்.

சமயவிரோதிகளின் நெருக்கிடைகளுக்கிடையே, நம் முன்னோர்க்குச் சிறையிலும், கொலைத் தண்டனையின் நடுவிலும், தேசப்பிரஷ்டத்தின்மத்தியிலும் தேற்றரவுதந்தவரான தேவனை, இன்றைய இன்னல்களின் இடையிலும் இருந்துணைபுரியுமாறு இரந்து மன்றாடுவோம்.

வேதவிசுவாசத்துக்கும், சன்மார்க்கத்துக்கும் நேர்விரோதமான போதனைகளும், சாதனைகளும் பொங்கிப் பெருகிப் பிரளயமாகிவரும் இக்காலத்தில் எங்களை நித்தியகேட்டினின்றும் கைதூக்குமாறு அவர்அநுக்கிரகத்தை அண்டிச்செல்வோம்.

நாம் ஆச்சரியமான ஞானத்தெளிவு பெற, பரிசுத்ததனத்திற் சுடர்கால, வீரத்துவமாகப் புண்ணியங்களை அனுசரிக்க, அர்ச்சியசிஷ்டதனத்தின் கொடுமுடியில் ஏறிப் பரகதியில் மகிமைப்பிரதாபமடைய, எம்மீது கிருபாநோக்கம் பாலிக்குமாறு, தாழ்ச்சி நம்பிக்கை நிலைமையோடு அவரை மன்றாடுவோம்.

# பள்ளிப்பிள்ளைகளுக்கு எமது மேற்றிராணி ஆண்டவரின் கடிதம்

மேற்றிராணியார் இல்லம்
யாழ்ப்பாணம்.
வைகாசி, 16, 1961.

**யேசுக்கிறீஸ்துநாதரில் எமக்கு மிகவும் அருமையான பிள்ளைகளே!**

எமது நாட்டின் கல்வி அமைப்பிலோ, சமுதாய அமைப்பிலோ என்ன மாற்றங்கள்தான் ஏற்பட்டபோதிலும் நாம் கிறிஸ்துவில் உங்கள் தந்தை, நீங்கள் எமது மைந்தர்.

திருச்சபையையும், அது ஆண்டவருக்குச்செய்யும் ஊழியத்தையும் அழித்தொழிக்க விரும்புகிறவர்கள் உங்களை எமது அன்பிலும், ஆண்டவர் ஸ்தாபித்த திருச்சபை மாத்திரமே உங்களுக்குத் தரக்கூடிய வழிகாட்டுதலிருந்தும் படிப்படியாய்ப் பிரித்து விடுவதற்கு வழிகள் வகுத்து விட்டார்கள்.

இதை ஆண்டவர் முன் அறிந்திருந்தார்; ஆகவேதான் இத்தகைய சதித்திட்டங்கள் நடக்கும்பொழுது அஞ்சவேண்டாமென எமக்குக் கூறியிருக்கிறார். ஏனெனில், அவர் எம்முடன் இருக்கிறார். அவருடைய இஸ்பிரீத்துச் சாந்துவானவர் எமக்கு வழிகாட்டுவார்,

உங்கள் ஞானப்பிதாவின் மேற்றிராணித்துவ அபிஷேக ஆண்டுநாளில் உங்களிடம் காத்திரமான தொன்றைக் கேட்க விரும்புகிறோம்: அதாவது, உங்கள் மத்தியில் இருந்து அநேகாநேகர் தேவஅழைத்தல்பெற்றுக் குருமாராயும், சந்நியாசர், கன்னியாஸ்திரிமாராயும், தேவபணிக்குத் தமது வாழ்க்கையில் பெரும்பாகத்தை அர்ப்பணஞ்செய்யக்கூடிய தொண்டராயும் திகழவேண்டும் என்ற நோக்கங்கொண்டு செபிக்கவும், விசேஷமுயற்சி செய்யவும் வேண்டுமென்பதே.

இக்கருத்துடன் மேல்வரும் ஞானமுயற்சிகளை இவ்வாண்டு வைகாசி 22 தொடக்கம் அடுத்த ஆண்டு வைகாசி 22 வரை அனுசரிக்கும்படி ஏவுகிறோம்.

1. தேவன் தமது ஊழியத்திற்கு அநேகரைத் தரும்படி, காலைச்செபவேளையில் ஒரு பிரியதத்த மந்திரம் நாள்தோறும் செபியுங்கள்.
2. கூடுமானபொழுது நற்கருணையில் வீற்றிருக்கும் ஆண்டவரை விசேஷவிதமாய்ச் சந்தித்து, உங்கள்சிநேகிதர் அயலாரை அர்ச்சிக்கவும், யேசுவின் அன்பை அநேகரிடை பரப்பவும் உங்களை ஒப்புக்கொடுங்கள்.
3. உங்கள் உடன்மாணவருக்கு நற்புத்தி கூறுவதுடன் உங்களுக்கும் தேவ அழைத்தலைப்பற்றி நினைவூட்டத் தீர்மானம் செய்யுங்கள். அதாவது, தேவனுக்காக உலகத்தைத் துறக்கவும், திருச்சபையுடன் சேர்ந்து செபித்து உழைப்பதினால் அவருக்காக மாத்திரமே வாழவும் அவர் அழைக்கின்றார் என்பதை நினைவுறுத்துங்கள்.
4. பாவசங்கீர்த்தனம்செய்து, அடிக்கடி ஆண்டவரைப் பெற்றுக்கொள்ள உறுதியான பிரதிக்கினை பண்ணுங்கள்.

இப்பிரதிக்கினைகளை அன்னைமரியின் பாதத்தில் வைத்து, இவைகளை அனுசரிப்பதற்கு அவரிடம் உதவி இரந்துகேளுங்கள். இக்கருத்துக்காக நாளாந்த குடும்பச்செபமாலையை ஒப்புக்கொடுங்கள். இப்பத்திமுயற்சிகள் உங்களில் அநேகருக்கு ஆண்டவரின் ஊழியராகும் அழைத்தல் எனும் பெரிய வரத்தைப் பெற்றுத் தருவதாக.

எமதுபாடசாலைகள் இனிமேல் உங்களுக்குக் கிறிஸ்துநாதரை நினைவுபடுத்த முடியாத நிலைமையிலிருக்கிற இந்நேரத்தில், இன்னுமொரு காத்திரமான கருத்தென்னவெனில்: உங்கள் தோழர் தீமையை அகற்றி யேசுவில் அதிக பட்சம் கொண்டிருக்கவேண்டுமென மன்றாடுவதாகும்.

எமது ஆண்டவரும் மாசற்றதிருத்தாயாரும் உங்களைக் காப்பார்களாக.

கிறிஸ்துவிலும் மாசற்ற மரியாயிலும்
உங்களை நேசிக்கும்
\+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O. M. I.
யாழ்ப்பாண மேற்றிராணியார்.

## கொழும்புத்துறை, அர்ச். சூசையப்பர்தாபனப் பழைய மாணவர்தினம்

மேற்படி தாபனப் பழைய மாணவர் தினம், அவசரகால நிலைமையை முன்னிட்டு இவ்வருடம் அமைதியான முறையில் 27-5-61 சனிக்கிழமை நடைபெறும். பழைய மாணவர்கள் யாவரும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| காலை 7-00 மணி: | திவ்வியபூசை. சற்பிரசாத ஆசீர்வாதம். |
| ,, 8-00 ,, | காலை உணவு. |
| ,, 9-00 ,, | பழைய மாணவர் சங்கமும், தராதரப் பத்திரமளிப்பும். |

கொழும்புத்துறை,
18-5-61.

வ. தீயோகுப்பிள்ளை,
(தாபனத்தலைவர்.)

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 27-ந்தேதி சனிவாரம் பி. ப. 4மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். பகுதித் தலைவர்கள்சங்கம் இம்முறை நடைபெறாது.

A S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாள்ஸ் யோசவ் இயூஜின் டி மசனட் ஆண்டவர்

## ( 1-8-1782 — 21-5-1861 )

தன்னகத்தே ஜொலித்த விசுவாசப் பிரபையாலும், பத்திவைராக்கிய மீசுரத்தாலும், தேவசிநேகப் பெருக்கத்தாலும் பிராஞ்சு தேசம் வெகுகாலமாகத் திருச்சபையின் மூத்தபுதல்வியெனக் கணிக்கப்பட்டே வந்தது. ஆனால், 18-ம்நூற்றாண்டில் அதனகத்தேஎழுந்த தேசப்புரட்டர்களின் அநியாய நிஷ்டூரக்கொடுமைகளால் அதன் விசுவாசமும், பத்திவைராக்கியமும், தேவசிநேகமும் சற்றேகுன்ற அதனை ஆண்ட அதிபதி திருச்சபையின் தலைவரான பாப்பிறையைக்கூடச் சிறைப்படுத்தப் பின்னிற்கவில்லை. இதன்பயனாக அவ்விடத்திலிருந்த ஏழைஎளியவர்கட்கு வேதஅறிவுஇல்லாது, அறியாமையாம் அந்தகாரத்திலும், அவவிசுவாசத்திலும் அவர்கள் ஆழமாய்த் தாழ்ந்துகிடக்க நேரிட்டது. பேதுரு என்னும் கல்லின்மேல் தாம்கட்டிய பரிசுத்ததிருச்சபையின் மூத்தபுதல்வியின் இவ்விழிநிலை தனைக் கண்ணுற்ற தேவன் அவளைத்திரும்பவும்சீர்ப்படுத்த எழுப்பிய புண்ணியபுருடர்களுள் மார்சேல்ஸ்நகரத்தின் கீர்த்திவாய்ந்த மேற்றிராணியாரான சாள்ஸ் யோசெவ் இயூஜின் டீ மசனட் ஆண்டகைகளும் ஒருவராவர். இவர் தென்பிரான்சின் புறேவான்ஸ் மாகாணத்தில் எயிக்ஸ்நகரத்தில் 1782-ம்வருடம் ஆவணிமாதம் 1-ந்திகதி பயபக்தி, செல்வம், மேன்மை ஒருங்கேவாய்ந்த குடும்பத்தில் பிறந்தார். பாலியபாரயம் தொடங்கியே புனிதமான ஆத்துமமும், உருக்கமான இதயமும் உடையோராய்த் திகழ்ந்தார். ஏழைஎளியோரின் வருத்தநோக்காடுகளைத் தாங்கமாட்டாதவராய், பயபக்திநிறைந்த பெற்றோர் தமக்களிக்கும் எதையும் ஏழைஎளியோர்க்கு மனமுவந்தளிப்பது இவருக்கு ஒருஇன்பமாகவிருந்தது. பலமுறை தம்மை ஒறுத்துத் தம்முடையஉணவைப் பசியாற் பீடிக்கப்பட்ட ஏழைகளுக்குக் கொடுப்பார். ஆறுவயதுடையவராய் இருக்கும்பொழுது ஒருநாள் தெருவில் கண்ட ஓர்ஏழைப்பையன்மீது இரக்கங்கொண்டு தம்முடைய சட்டையைக் கழற்றி அவனுக்குக்கொடுத்து அவனை ஆனந்தித்தார். செல்வம், உயர்குலம், புனிதம் ஆதியன தேங்கப்பெற்றவராய்ச் சங்கைபோந்த கோத்திரத்தின் கடைசிஆண்மகவாய் இவர் உதித்தமையால், தமதுபெற்றோரின் அதிமேலான அன்புக்கு ஆளானார். ஆயின், இச்செல்வாக்கு நெடுங்காலம் நிலைக்கவில்லை. அக்காலத்திலிருந்த தேசப்புரட்டர்களின் கொடூரத்துக்குத் தப்பி ஓடிய பிராஞ்சுதேசத்தின் ஏனைய குலமக்களைப்போல், இவர்குடும்பமும் தப்பி ஓடி முதன்முதல் லையன்ஸ் நகரிலும், பின் ரியூறின்நகரிலும் புகலிடந்தேடி, பிந்தியநகரின் மேன்மக்கள் கல்லூரியில் கல்விபயின்றார். இவர் திவ்விய சற்பிரசாதத்தின்மட்டிலும், பரமஇராக்கினியின்மட்டிலும் விசேஷபத்தியுடையவராய் இலங்கினார். இக்கல்லூரியிலேயே அவர் நெடுநாள்ஆசித்த முதற் தேவநற்கருணைபெறும் பாக்கியம்கிட்டியது. இங்குதானே கல்விஅறிவிலும், நன்முன்மாதிரிகைநிறைந்த சன்மார்க்கத்திலும் மற்றவர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் துலங்கினார். 1802-ம் வருடம் டி மசனட்குடும்பத்தினர் தங்கள் ஜென்மபூமியாகிய பிராஞ்சுக்குத் திரும்பினார்கள்.

### குருமடம் சேர்தலும் குருப்பட்டாபிஷேகமும்

பிராஞ்சுக்கு அவர் திரும்பிவந்தபோது அவருக்கு வயது இருபது. வாலிபவயதின் சுடரும், மேன்குணப்பாண்மையும், சம்பாஷணைத் திறனும், வசீகர நல்லொழுக்கமும், முகத்தின் வனப்பு, கெம்பீரத்தோற்றம் முதலாம் குணவிசேஷங்களும், அவரின்உயர்குல வட்டாரத்திற்கு அவரைவெகுவாய் அருமைப்படுத்தினபடியால் உலகத்திலேயே ஒய்யாரமாய் இருக்கக்கூடியவரானார். அழலான இதயப்பற்றுதல் நிறைந்த அவரின் பரிசுத்தவீடும், தமது குடும்பத்தின் தலைவராக அவர் நிறைவேற்றவிருந்த கடமைகளும் இன்னோரன்ன பலவும் அவருக்குத் தடைக்கற்களாய் அமைந்தன. ஆனால், இத்தடைகள் "நீ என்னைப் பின்தொடர்" என்று அவரது இதயத்தில்பேசி, அவரை அ[illegible] லொலிமுன் [illegible] மறைந்தொழிந்தன. இயூஜின் காலதாமதமின்றி உலகத்தைவெறுத்துச் சன்சல்பிஸ்என்ற குருமடத்தைச் சேர்ந்து, அங்கே குருத்துவம்என்னும் உந்நதஅந்தஸ்துக்கு வேண்டியஅறிவிலும், புண்ணியங்களிலும் நாளாந்தம் வர்த்தித்துத் தம்மைப் பூரணப்படுத்திக்கொண்டு வந்தார். இக்குருமடத்தில் சேர்ந்ததொடக்கத்திற்றானே இயூஜின் என்பவர் அவ்விடத்திலிருந்த அதிமேலான சாங்கோபாங்கமுள்ளவர்களோடு நடமாடத்தொடங்கினார். தம்மிடத்தில் விளங்கியபுண்ணியங்களை மறைக்க அவர்எவ்வளவோ பிரயாசப்பட்டபோதிலும், அவற்றின் பிரபையை மறைக்க அவரால் முடியாமற்போனது. குருப்பட்டத்திற்கு முந்தியபட்டங்களை ஒன்றன்பின்ஒன்றாக அதிசீக்கரத்தில் அவருக்குஅளித்ததே அவரின் ஞான அதிகாரிகள் அவரிற்கொண்ட அளவிறந்த நம்பிக்கையைத் தெளிவுறுத்துகிறது. அவர்காலத்தில் இருந்தகுருப்பிரசாதிகளின் அவபத்தி, வேதமறுப்பு முதலிய குற்றங்களின்நிமித்தம் குருபதவிக்குச் சாய்மானமுள்ளவர்களை வெகுசாக்கிரதையாகவும், தாமதமாகவும் ஞானஅதிகாரிகள் உயர்த்திவந்தபோது, அவரைமட்டும் அவ்வளவு விரைவில் அவ்வுன்னதபதவிக்கு உயர்த்தியது பெருவியப்பையளிக்கிறது. 1811-ம்வருடம் மார்கழிமாதம் 23-ந்திகதி ஏமியன்ஸ்நகரத்து மேற்றிராணியார்கையால் குருப்பட்டாபிஷேகம் பெற்றார். மேற்படி மேற்றிராணியார் அவரைத் தமது விக்கார்ஜெனறல் பதவிக்குஉயர்த்த மனங்காட்டிய போது அப்படிப்பட்ட மகிமைச்சிலாக்கியத்தை மறுத்துவிட்டு, சென்சல்பிஸ் குருமடத்திற்குத் திரும்பிப்போனார். அவ்விடமிருந்து 1812-ம்வருடம் தமது சுயநகரான எயிக்ஸைஅடைந்தார்.

### "சபை ஸ்தாபகம்"

அவரின் புகழும், பிரபல்யமும் சனங்களுக்குஎட்டவே, அவர்கள் இவ்வாலிப அப்போஸ்தலரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், அவர்தமது அப்போஸ்தலசீவியத்தை ஏழைஎளியோர்க்குப் பின்வரும் தொடர்வரிசையான பிரசங்கங்களினால் தொடங்கியபோது சனங்களது அதிசயம் மட்டற்றதாயிற்று. "இயேசுக்கிறீஸ்துநாதரின் எளியோரே! துன்பதுரிதங்கள், அதிர்ஷ்டவீனம், நிர்ப்பாக்கியம் ஆதியவற்றால் நெருக்கப்படுவோரே! நோய்பிணியால் வருந்தி, குஷ்டரோகத்தால் மூடப்படுவோரே! நான்கூறுவதைச் சற்றேகவனியுங்கள்." இவ்விதவாக்கியங்களால் ஏழைஎளியோர்க்குப் போதித்துத் தாம்ஓர் மறுகிறிஸ்துஎன்பதைத் தெள்ளெனப் புலப்படுத்தினார். புலப்படவே ஆயிரக்கணக்கானோர் அவர்பிரசங்கங்களைக் கேட்கவும், அவரின் பாவசங்கீர்த்தனத் தட்டியை வளைந்துநிற்கவும் தொடங்கினர். அவர்தமது அப்போஸ்தல வேலையைத் தொடங்கிய சிலவருடங்களுள் பிராஞ்சியதேசப் புரட்டர்கள் செய்தகொடுமைகளும், எளியவர்களின் அறியாமையும், துன்மார்க்கமும் வெகுதெளிவாய்த் தென்பட்டன. இவற்றிற்கு நிவிர்த்திசெய்யும்வேலை ஆமோகமாய் இருந்தபடியால் தன்னந்தனியே அதை முடிப்பது முழுதும் அசாத்தியமான கருமம்எனக்கண்டு, தமதுபோக்குள்ள தாம்பியர்என்னுங் குருவானவரோடு இன்னும் மூன்று குருப்பிரசாதிகளையும் சேர்த்து ஓர்சிறுசபையை உண்டாக்கினார். வீட்டில்அவர்கள் அதிபரிசுத்த சீவியம்நடாத்தி, வெளிப்புறத்தில் வெகுவாய்க் கைவிடப்பட்டிருந்த ஏழைஎளியவர்களுக்கு வேதசத்தியங்களைத் தெளிவிக்கப் போய்வருவார்கள். இப்போதகர்கள் தாம் சென்றவிடமெல்லாம் வெகுசித்திகரமாய் வேலைசெய்வதைக் கண்ணுற்றசகலரும் தங்கள் பங்குகளிலும் அவர்கள் உபதேசிக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார்கள். அவர்களின் புண்ணியசுகந்தமும், அப்போஸ்தல அலுவல்களின் அனுகூலமும் நாலாபக்கங்களிலும் பரந்து புதுப்புது அங்கத்தினர்களை அவர்களின் சிறுசபைக்குக் கொண்டுவர ஏதுவாயிருந்தது. 1826-ம்வருடம் டி மசனட்எண்பவர் றோமாபுரிக்கேகி, 12-ம் சிங்கராயர்எனும் பாப்பிறையைக்கண்டு தமதுசிறுசபை பூச்சியமாய் அங்கீகரிக்கப்படவும், அமலோற்பவ மரியநாயகிசபைஎனும் மகிமைப்பிரதாப நாமம்சூட்டப்படவும் பெறுபேறுபெற்றார். இச்சபையானது அதிகரித்து மென்மேலும் பெருக்கமுற்று உலகம்முழுவதையும் நிரப்புவதாகஎனப் 12-ம்சிங்கராய பாப்பிறைபகன்ற ஆசீர்வாத மொழிகளுக்கிணங்க இச்சபையானது 145 வருடங்களுக்கிடையில் பெரியதோர் இராட்சத விருட்சமெனப் பலிதமுற்று வளர்ந்து உலகின் எண்டிசைகளிலும் தனது கிளைகளைப் பரப்பிப் பற்பலபாஷைகளைப் பேசுவோரான பற்பலசாதியாரைத் தனதுநிழலின்கீழ்ச் சேர்த்துக்கொள்ளலாயிற்று. ஆறாயிரத்துக்குமேற்பட்ட இச்சபைச் சந்நியாசிகள் உலகின் ஐந்துகண்டங்களிலும் தங்கள் கீர்த்திவாய்ந்த சபைஸ்தாபகரால் குறிக்கப்பட்டதுபோல ஏழைகளுக்குச் சுவிசேஷம்போதிக்கும் திருத்தொண்டாற்றி வருகிறார்கள்.

(வளரும்)

* * * * * * * * * * * * * * * * * * * * *



மேற்றிராணித்துவ அபிஷேக

### 12-வது ஆண்டு நிறைவு

மகாவந். நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் மேற்றிராணித்துவ அபிஷேகஞ்செய்யப்பெற்ற 12-வது ஆண்டுநிறைவுஞாபகதினம் நிகழும் வைகாசிமாதம் 22-ந்திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை வருகின்றது. இச்சுபசந்தர்ப்பத்திலே ஆண்டகை அவர்கள் மேலும், அவர்மூலமாக எமது மேற்றிராசனத்தின்மேலும் இதுவரை பொழியப்பெற்றுள்ள சகல ஆசீர்வாதங்களுக்கும், அருட்பிரசாதங்களுக்குமாகச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்ததோத்திர நமஸ்காரம் சமர்ப்பிப்பதிலும், அவருடையதிருத்தொண்டுகளாலே அதிக மதிகமான இகபரநன்மைகளை அடையும்படியாகத் தேவானுக்கிரகத்தை இரந்துகொள்வதிலும் அவருடைய ஞானமக்களாகிய நாமெல்லாம் ஒன்றுசேர்வோமாக! நமது நல்லாயருக்குத் தேவன் தேகசுகத்தையும், ஆன்மபலத்தையும், தேவவரப்பிரசாதங்களையும், கையிடும் கருமங்களில் சித்தியையும் அருளி, இன்னும் பல்லாண்டுகளுக்கு அவரைப் பாதுகாத்தருளுவாராக.

* * * * * * * * * * * * * * * * * * * * *

### கொழும்பு அதிமேற்றிராணியார்

ஆசா. சாள்ஸ் ஈயூஜின் டி மசனட் ஆண்டவர் பரமபதமடைந்த் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கொழும்பு அதிமேற்றிராணியாராகிய மகாமேன்மைதங்கிய தோமஸ் கூறே ஆண்டவர் சென்ற புதன்கிழமை விமானமூலம் பிரான்ஸ்தேசம் சென்றிருக்கின்றார்.

---

இறைவன் எமது உள்ளத்தில் இன்றேல் எமது பகல் இரவாகும்; அவர் இருப்பரேல் எமது இரவு எல்லாம் பகல்.

---

சாள்ஸ் யோசவ் இயூஜின் டி மசனட் ஆண்டவர் அவர்கட்கு

முத்திப்பேறுபெற்றபட்டம் கிடைக்கும்படி

### செபம்

யேசுநாதரே சுவாமீ! "கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் திறக்கப்படு"மென்று திருவாய் மலர்ந்தருளினீரே! உமது திருச்சபையினதும், அமலோற்பவ மரியதாயினதும் மகிமைக்காக உமது தொண்டனான சாள்ஸ் யோசவ் இயூஜின் டி மசனட் மேற்றிராணியாண்டவர் செய்தவைகளை நினைவுகூர்ந்தருளும். அவரின் வேண்டுதல் மூலமாய் நாங்கள் இரந்து கேட்கும் இந்த வரத்தை (இவ்விடத்தில் அதைக் குறிக்கவும்) உமது மேலான மகிமைக்காகவும், அவரின் பரிசுத்ததனத்துக்கு ஒரு வெளி அடையாளமாகவும் பரிசுத்த திருச்சபையானது அவரைத் தனது பீடங்களில் வணங்கும் மகிமையை அவருக்குக் கொடுக்கச் செய்தருளும்படி உம்மைத் தாழ்மையுடன் பிரார்த்திக்கின்றோம், ஆமென்.

அமலோற்பவ மரியாயே! எங்கள் மன்றாட்டைத் தள்ளாமல் எங்கள்மேல் அன்புகூர்ந்து கிருபை பாலித்தருளும்.

அர்ச். சூசையப்பரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

(ஒரு பர., பிரி., திரி. சொல்லவும்.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இளைஞர் பக்கம்

அப்போஸ்தலிக்க பாடசாலை,
அர்ச். அன்னம்மாள்கோயில்,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

**அன்பார்ந்த பிள்ளையே!**

நீர் விபரங்கேட்டு எழுதிய நடிதம் கிடைக்கப்பெற்றேன். ஏதோ ஒருவிதத்தில் தேவனுக்குத் தொண்டுசெய்ய நீர் மனம்கொண் டிருப்பதையிட்டுச் சந்தோஷங் கொள்ளுகின்றேன். எம் மேற்றிராசனத்தில் மற்றோர் இரட்சணியத்திற்காக முயற்சிக்கவிரும்பும் அநேகர்தேவை. சந்நியாச, கன்னியாஸ்திரி மடங்களில் தங்கியிருந்தல்ல, வெளிவெளியாய்ச் சனத்தின்மத்தியில் வாழ்ந்து ஊழியஞ்செய்யக் கூடியவர்கள்தான் அநேகர்தேவை.

தற்போதைய தேவைக்குத் தக்கதாய்ப் பரிசுத்த பாப்பரசரும் விரும்பி, இக்கால தேவைக்கிசைய நன்மனம்கொண்ட தகுதியுள்ளயாவரும் இப்பேர்ப்பட்ட சபைகளில்சேர்ந்து ஊழியம்செய்யும்படி விரும்புகின்றார்கள்.

ஆகவே, நமது மேற்றிராசனத்திலும் இதுபோன்ற ஒருசபையைநிறுவ எத்தனித்துள்ளோம். இதில் எஸ். எஸ். சி. பாஸ்பண்ணிய அல்லது படித்த நன்மனங்கொண்டவர்களே சேர்க்கப்படுவார்கள். சொற்பகாலம் ஆத்துமசிவியப் பயிற்சிக்காலமாய் இருக்கும். அதன்பின் ஊழியத்தில் ஈடுபடவேண்டும். மேற்றிராசனத்தின் எப்பகுதியிலும் ஒவ்வொருவரினதும் தராதரத்துக்கும், இயற்கைக் கொடைகளுக்கும் தக்கதாய்ச் சனங்களின் மத்தியில் ஊழியஞ்செய்ய வேண்டும். "ஊழியன் சம்பாவனைக் குரியவன்" என்ற சுவிசேஷ வாக்கின்படி, நன்மனதுகொண்டு ஊழியஞ்செய்வோருடைய தாபரிப்புக்கு மேற்றிராணியார் ஏதோ உதவிசெய்வார்.

இவ்வண்ணம் சேர்வோரில்சிலர் தங்கள் முழுச்சீவியத்தையுமே இத்தேவ ஊழியத்தில் ஈடுபடப்பண்ண விரும்பும்போது, கற்பு, தரித்திரம், அமைச்சல் சம்பந்தமான உறுதிவாக்குகள்கொடுத்து இன்னும்கூடிய கட்டுப்பாடுகளுடன் தேவதொண்டு செய்யும்படி அழைப்போம்.

துறவறத்தோரல்லாதோராகிய கிறிஸ்தவர்களில் இவர்களே முதன்மையிடம் வகிப்போரென்று சொல்லலாம். இல்லறத்தோராயினும், சாங்கோபாங்க சீவியம்சீவிக்க விரும்பிச்சீவிப்போர் இவர்களே.

துறவிகள் மடங்களிலிருந்துகொண்டு அடையவிரும்பும் சாங்கோபாங்கத்தை, இவர்கள் சனங்களின் மத்தியிலேசீவித்து, அவர்கள்செய்யும் தொழில்களில் கைபோட்டுக்கொண்டு அடைவதற்குச் சிநேகத்தால் தூண்டப்பட்டு முயற்சிப்பார்கள்.

இப்படிப்பட்டவர்களே தற்போது அவசியம்தேவை. ஆண்களுக்குரிய பயிற்சிஸ்தாபனம் மேற்படிவிலாசத்திலுள்ள ஆலயத்தில் நடைபெறுகின்றது. பெண்களுக்குரியது இன்னும் தொடங்கவில்லை. ஆனால், உம்மைப்போன்றசிலர் நமக்குஎழுதி விபரங்கள் கேட்டிருக்கிறார்கள். எம்முடன் கடிதம்மூலம் தொடர்பு வைத்துவந்தால் ஆயத்தமானவுடன் அறிவிப்போம். யேசுவின் திருஇருதயத்திலும், தேவதாயாரின் மாசற்றஇருதயத்திலும் உமது அழைத்தலை ஒப்படைத்து முடிக்கிறேன்.

ஞானப்பிதா

# மது அரக்கன்

இன்று எங்குபார்த்தாலும் மது. மது இல்லாத ஊரே இல்லை. மதுவே உயிரெனப்போற்றும் மாந்தர் தொகை ஏராளம், ஏராளம். மதுவென்றால் ஒருவகையா, இருவகையா? எத்தனையோ வகைகளில் எத்தனையோ பெயர்களைத் தாங்கி அரக்கத் தொழில்புரிந்து வருகின்றது. எத்தனையோ பஞ்சமாபாதங்கட்கெல்லாம் காரணகர்த்தாவாகத் திகழ்கின்றது மது.

இம் மதுவை ஒருவகையில் நஞ்செனவே குறிப்பிடவேண்டும். மது உண்ணுதலால் அழிந்த உயிர்கள் ஏராளம். இம்மது சரீரத்தைமட்டுமா அழிக்கின்றது. பரிசுத்தமாயிருக்கவேண்டிய ஆன்மாவையுமல்லவா அழிக்கின்றது. சொற்பமோ, அதிகமோ மது அருந்தவேண்டிய அவசியமேயில்லை. மதுவையருந்தி மதியைக்கெடுக்கும் மாந்தர் இதனைப்பற்றிச் சிந்திக்கவேண்டாமா?

வீதியிலே குடிபோதையால்வரும் குடிகாரர்களால் ஏற்படும் ஆபத்துக்கள் அனந்தம். குடிகாரர்களால் குடும்பக் கௌரவத்திற்கே பங்கம் உண்டாகின்றது. மது, மதியைமட்டும் கெடுப்பதன்றி, மானத்தையுமல்லவா வாங்குகின்றது, மானமிழந்தால் வாழ்வில் பயனேது? "மானமிழந்து வாழாமை இனிதன்றே."

மதுவை உண்டு மதியை இழந்த மதியீன மனிதர்களால் ஏராளமான குடும்பங்கள் சீரழிந்ததையும், சீரழிவதையும் அறியாதார் இல்லை. வீட்டிலே பெற்றபிள்ளைகளுடன் இருக்க வேண்டிய நேரத்தில் மதுக்கடையில் மதியையிழந்திருக்கும் மனிதர் இதனை உணரவேண்டும்.

முடியாது என்ற சொல்லுக்கு நெப்போலியனின் வாழ்க்கையில் இடமேயிருக்கவில்லையாம். ஆம், எதற்கும் மனதில் உறுதிவேண்டும். மதுவால் உண்டாகும் தீமைகளைச் சிந்திக்க வேண்டும். மனமுண்டானால் இடமுண்டு.

கள்ளை உண்பவர்கள் நஞ்சையே உண்பவர்கள் என்பதை எடுத்துக்காட்டித் திருவள்ளுவர் கூறுவதென்ன?

"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண்பவர்"

இக்குறளில் உள்ள உண்மைகளை உணரவேண்டாமா? மேலும், மதுவானது உடலிலுள்ள இரத்தத்தையும், நரம்புகளையும் பாதிக்கக்கூடியதென விடயத்தை ஆராய்ந்த வைத்தியர்கள் பலர் கூறியுள்ளனர்.

இளம் வயதிலேயே இம் மதுப் பழக்கத்தினால் உண்டாகும் கேடுகளையுணர்ந்து, அவற்றினை எம்வாழ்வில் முற்றாய் ஒழிக்கவேண்டுமெனச் சபதம்பூணவேண்டும். மதுவருந்தும் பழக்கம் ஏற்பட்டாலோ அதனைக் கைவிடுவது கடினம். எனவே, வாலிபவயதில் இப்பழக்கத்தை வரவொட்டாமல் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எனவே மது அரக்கனை முற்றாய்த் தீர்த்துக்கட்ட முக்கியமாய் வாலிபர்கள் முன்வருவார்களாக.

— அ. பாலதுரை, ஜெகசோட்டணம்,

# என் சந்தேகத்தை நீக்கிவிடுங்கள்!

வண. பிதாவே! 26—5—60-ல்வெளிவந்த பாதுகாவலனில் "இளைஞர் பக்கம்" என்ற பகுதியில் "அன்புமிக்க இளைஞர்களே!" என்ற தலையங்கத்திலே ஆரம்பத்தின் கீழ்வந்துள்ள பகுதியை வாசித்தேன். ஆனால், அதன் மூன்றும்பகுதியில்,

"குருவாய் அல்லதுசந்நியாசியாய்ச் சேர்ந்து திருஊழியம் நடத்தலாம். இவ்விரண்டிற்குமே அழைத்தல் இல்லாவிடின், இன்னும் உலகத்தின் மத்தியில் இருந்துகொண்டு அன்பின் மூலம் சுயநலமற்ற சேவைசெய்ய உங்களுக்கு அழைப்புண்டு" என்ற தொடர்ச்சியை வாசித்தேன். என் மனதில் இனம்புரியாத ஒருசோகம் எழ, சந்தேகத்திற்கு ஆளாய்விட்டேன்.

என்னால் குருவாகவும், பிறதராகவும் வரமுடியாது. காரணம் யான் ஒரு பெண்பிள்ளை. ஆயினும், நான் கன்னியாஸ்திரியாகவும் முடியாது. அதற்குக்காரணம் என்பெற்றோர் என்னை முதன்முதலில் பெற்றுத் தலைச்சன்பிள்ளை மூத்தபிள்ளை என்ற பட்டப்பெயரைச் சூட்டிவிட்டதாகும். அவர்கள்என்னைச் சந்நியாசத்திற்கு அனுப்பத் தயாராயில்லை. ஆதலால் நான் இல்லற அந்தஸ்தைத் தான் தெரிந்துகொள்ள வேண்டியதாய் இருக்கின்றது.

பிதாவே! தயவுசெய்து என்சந்தேகத்தை, அறியாமையை நீக்கும்படி தங்களைத் தயவாய் வேண்டுகின்றேன். அதாவது, மேலேயுள்ள கோடிட்டுள்ள பகுதிக்குப் பூரண விளக்கமொன்றை அளிக்குமாறு தயவுடனும், பணிவுடனும் பிதாவின்மட்டில் பிள்ளைக்குரிய அன்புடனும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

பிதாவே! நான் இந்தவருடம் ஆவணிமாதக்கல்விப் பொதுத்தராதரப்பத்திரப்பரீட்சையில்தோற்றப் போகிறேன். எனக்கு நற்படிப்பையும், நற்சிந்தனையையும், பரீட்சையில் தேர்ச்சியையும், வாழ்வில் பரிசுத்த தனத்தையும் இறைவனிடம் தங்கள் செபவேளையில் மன்றாடிப் பெற்றுத் தரும்படி வேண்டி முடிக்கிறேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையும், அன்புமுள்ள,
என். எவ்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 10250

உரும்பிராய்
ராழசாமி செல்லத்துரை
ஊரெழு, பிரதிநிதி.
சின்னப்பு குமாரவேலு
— வழக்காளிகள்,
எதிராக, ஊரெழு
1. தம்பித்துரை கனகராயர்
உரும்பிராய்
2. அருமைரத்தினம் செல்லப்பா
(தற்சமயம் மலாயா)
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 10250-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1961-ம் ஆண்டு ஆனிமீ 17-ம் திகதி (17-6-61) சனிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2,863-ம், இதற்குத்தீர்வைரூபா 2,000-க்கு 19-8-53 திகதிதொடக்கம், 10-1-56வரை 100-க்கு 6வீத வட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூ. 248-20ச.

### காணிகள் விபரம்

1. 1951-ம் ஆண்டு ஆடிமாதம் 26-ம் திகதி லைசன்ஸ் சேவையர் T. சின்னத்துரையால் தயாரிக்கப்பட்ட பிளானில் 3&4 இல. யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 6512-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்ட காணி வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு, மல்லாகம் கோவிற்பற்று, எழாலை இறை "கிதாவலையும், பெரியகாடும், தனயன் கலட்டியும்" பரப்பு நிலஇலாச்சம் 102-ம், குளி 7-ம், லோட் 5-ல் இருக்கின்ற பங்கும், அதைச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — லோட் 5. வடக்கு—லோட் 2. மேற்கு—யோசப் பெண் சற்குணத்துக்கும், பேரம்பலம் பெண் இராசம்மாவுக்கும், மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு—கார்த்திகேசு நல்லையாவுக்கும், பேரம்பலம் பெண் இராசம்மாவுக்கும் உரிய ஆதனங்கள். இது அடங்கலும்.

2. மேற்படிஇறை "தேவரியோடை" பரப்பு நிலஇலாச்சம் 18. ஆனால் அளவின்படி பரப்பு நிலஇலாச்சம் $15\frac{1}{4}$ ஆம், தெற்கு எல்லையில் இருக்கின்ற கிணற்றில் பங்கும், பயிர்களும், வீடுகளும். எல்லை: கிழக்கு—றோட்டு. வடக்கு—ஒழுங்கை. மேற்கு—அன்னமலை பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனம். தெற்கு—தம்பையா பெண் அன்னலட்சுமிக்குரிய ஆதனம். இதடங்கலில் சொரியலாய் $\frac{1}{3}$ பங்கும் அதைச்சேர்ந்தவைகளும்.

சி. செ. மாரிமுத்து,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
"விதானை வளவு,"
சித்தன் கேணி, 9-4-61.

## காணி விற்பனை

மிருசுவில், திரு. சீ. ப. அந்தோனிப்பிள்ளை (சுதேச வைத்தியர்) அவர்களின் பேரப்பிள்ளைகளான திரு. யேம்ஸ் தம்பதிகள் அவர்கள் தங்களுக்கு உரிமையான "வேளா வெள்ளம்" எனப்படும் காணியை விற்பதற்கு முன்வந்திருக்கிறார்கள்.

### காணி விபரம்

மிருசுவில், கண்டிறோட்டிலிருந்து வடக்குத்திசையாக $1\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கும் 65 பரப்புக்காணி. இதில் அதிகம் பனைகளும், சொற்ப தென்னைமரங்களும் அடங்கும். பரப்பு ரூபா 80-க்கு மேல் விலைமதிப்பிடப்படும். விரும்பியவர்கள் கூடியகெதியில் அறிவிக்கவும்.

ச. யேம்ஸ்,
மிருசுவில்.

கர்த்தோர் விலாசம்:

ச. யேம்ஸ்,
121, 2ம் குறுக்குத்தெரு,
கொழும்பு 11.

செப அப். சபை வெளியீடு

## காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர் திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

* * *

## வைகாசி மாதம்

பொதுக்கருத்து — தேவகாரியங்களில் மக்களுக்குள்ள அசட்டைத்தனம் திவ்விய இஸ்பிரீத்துச்சாந்துவின் வரத்தால் நீங்கும்படியாக வேண்டிக்கொள்வது.

வேதபோதக கருத்து — வேதபோதக அப்போஸ்தலத்துவத்திற்கு ஏற்றமுறையில் இல்லறவாசிகளுக்குத் தீவிரமான வேதப்பயிற்சி அளிக்கப்படும்படியாக மன்றாடிக் கொள்வது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளர் பக்கம்

## தொழிலாளரின் உரிமைச் சாசனம்

### 13-ம் சிங்கராய பாப்பரசரின் பொதுநிருபம்

(தொடர்ச்சி)

**2-ம் பாகம்**

**தொழிற் பிரச்சினையும் திருச்சபையும்**

**3. உலக பொருள்களின் முறையான உபயோகம்**

**(அ) நமது கதிமோட்சம்**

கிறிஸ்துநாதரைத் தலைவராகவும், வழிகாட்டியாகவும் கொண்டுள்ள திருச்சபை இன்னும் மேலான கருத்தைக் கொண்டுள்ளது. முன்குறிப்பிட்டவைகளிலும்பார்க்க உத்தம சட்டதிட்டங்களை விதித்து, பல் வகுப்பினராயிருக்கும் மனிதர் மத்தியில பரஸ்பர நல்லுணர்வையும், சிநேகபாவத்தையும் ஏற்படுத்தப் பிரயாசப்பட்டுக்கொண்டு வருகிறது. பின்னல் வரப்போகிற முடிவில்லாத பரலோக சீவியத்தைக் கருத்தில் கொள்ளாமல் உலககாரியங்களைச் சரியாக அறியவோ, மதிப்பிடவோமுடியாது. மறுஉலகசீவியத்தை மனதிலிருந்து நீக்கிவிட்டால், நல்லது எது? தீயது எது? என்றதீர்மானம் அதோடு மறைந்துவிடும். அதுமட்டுமல்ல, இந்தப்பிரபஞ்சத்தின் ஏற்பாடே புத்திக்குப் புலப்படாத இருண்ட இரகசியமாக மாறிவிடும். இயற்கை விதிகளைக்கொண்டு நாம் அறிந்துகொள்ளும் உண்மையைத்தான் கிறிஸ்துவ வேதசாஸ்திரமும் நமக்குக் கற்பிக்கிறது. அதாவது, இவ்வுலக சீவியம் முடிந்தபின்தான் நாம்உண்மையாகவே சீவிக்கத் தொடங்குகின்றோம். இந்தக் கொள்கையே வேதத்திற்கு அஸ்திவாரமாக இருக்கின்றது. அழிந்து மறைந்துபோகக்கூடிய உலக காரியங்களுக்காகக் கடவுள் எம்மைப் படைக்கவில்லை; ஒருபோதும் அழியாத பரலோக பாக்கியத்துக்காகவே அவர் நம்மைச் சிருஷ்டித்தார். இந்த உலகம் நமக்கு ஒரு சஞ்சார தேசமே ஒளிய, நிலையான வாசஸ்தலமல்ல. நல்லவைகளும், விருப்பத்தக்கவைகளும் என்று மனிதர் மதிக்கும் ஆஸ்திபாஸ்திகள் ஒருவனுக்கு ஏராளமாக இருந்தாலும் சரி, அவன் ஏதுமற்ற அட்டதரித்திரத்தில் அமிழ்ந்திருந்தாலும் சரி பரலோகசீவியத்தைப் பொறுத்தமட்டில் அவ்விரு நிலைகளுக்குமிடையில் எவ்வித வித்தியாசமும் இல்லை. உலக பொருள்களைச் சரியான வழியில் உபயோகிக்கவேண்டும் என்ற ஒன்றுதான் முக்கியமானது.

**(ஆ) தனவந்தரும் தரித்திரரும்**

ஆகையால், தனவந்தர்களுக்கு எச்சரிப்பாக இங்கு ஒரு வார்த்தை கூறுவது நல்லது. பணத்தினுல் உலகிலுள்ள துன்ப துயரங்களுக்குத் தப்பிக்கொள்ள முடியாது; நித்திய பாக்கியத்துக்குப் பணம் பிரயோசனப்படாமலிருப்பதுமல்லாமல், பெரும்பாலும் இடையூறகவே இருக்கும். கிறிஸ்துநாதர் தனவந்தரைக் குறித்துக் கூறிய பயங்கரத்துக்குரிய வாக்கியங்களை அறிந்து அவர்கள் நடுங்கவேண்டும். நமதாண்டவருடைய வாயில் இவ்வளவு கடினமான வார்த்தைகள் சாதாரணமாய் வந்ததில்லை. நம்மிடத்திலுள்ள ஒவ்வொரு பொருளைப்பற்றியும் அதியுன்னத நீதிபதிக்கு நாம் மிகவும் கண்டிப்பான கணக்குக் கொடுக்க வேண்டும். பணத்தின் உபயோகத்தைப்பற்றிக் கிறிஸ்தவர்களல்லாத சாஸ்திரிகளும் ஒரு முக்கியமான மிகச் சிறந்த விதியைக் குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் குறிப்பிட்டிருப்பதையே திருச்சபையும் நன்றாகவிளக்கிக்காட்டி மனிதர்மனதில் பதியச் செய்திருப்பதுமல்லாமல் நடைமுறையில் அதை எக்கள் அனுசரிக்கும்படியும் முயற்சி மடுத்து வந்துள்ளது. அதற்கு அடிப்படையான கோட்பாடு யாதெனில்: ஒருவன் பணத்தைத் தனக்குச் சொந்தமாக வைத்திருப்பதற்குரிய சுதந்திரம் வேறு, பணத்தைத் தன்னிஷ்டம் போல் செலவழிப்பதற்குரிய சுதந்திரம் வேறு. தனிச்சொத்துரிமை நாம் முன்கூறியதுபோல மனிதனுக்கு இயல்பாகவே உள்ளஉரிமை. இந்த உரிமையை ஒருவன் தான் சமூகத்தின் ஓர் உறுப்பு என்ற முறையில் அனுபவித்துவருவது நியாயமாயிருப்பதுமல்லாமல் அவசியமுமாகும். அர்ச். அக்குவினு தோமையார் கூறுவதாவது: "தனிச்சொத்துரிமை நியாயமானதே; மனித வாழ்க்கையின் சேமத்துக்கு அது அவசியமாகும்..."

ஆனல், ஒருவன் தனது சொத்தை எவ்விதம்உபயோகிக்கவேண்டுமென்று கேட்டால் அதற்குத் திருச்சபை தயக்கமின்றித்தருப்பதில், முன் குறிப்பிட்ட வேதசாஸ்திரியின் பின்வரும் வார்த்தைகளில் அடங்கியிருக்கின்றது: "மனிதன், இலௌகீகப் பொருள்களான தனது சொத்துத் தனக்குமாத்திரம் உரியதென்று கருதக்கூடாது. ஆனல், தேவையானபோது மற்றவர்களுக்கும் அது உதவத்தக்கதாக அதை. எல்லாருக்கும் பொதுவான பொருளாகக் கருதவேண்டும். இதனல், தடையின்றி, தாராளமனதோடு தருமம்கொடுக்கும்படி தனவந்தருக்குக் கட்டளையிடுங்கள்" என்று அப்போஸ்தலர் கூறுகிறர். ஒருவன் தனக்கும் தனது குடும்பத்துக்கும் அவசியமான பொருள்களிலிருந்து தானதருமம் கொடுக்கவேண்டுமென்று அவனுக்கு ஒருவரும் கட்டளை இடவில்லை. இன்னும், அவன் தன் அந்தஸ்துக்கேற்ற வசதிகளோடு வாழ்வதற்கு அவசியமானவற்றிலிருந்து பிறருக்குத் தருமம் கொடுக்கவேண்டுமென்று சொல்லவில்லை. "ஏனெனில், ஒருவனும் தன் அந்தஸ்துக்குத் தாழ்ந்தவகையில் சீவனம் செய்யக்கூடாது." ஆனல்,ஒருவன் தன் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும், தன் அந்தஸ்துக்குத் தக்க நிலைமையில் வாழ்வு நடத்துவதற்கும் அவசியமானவை போக மீதி இருந்தால் அதிலிருந்து ஏழைகளுக்குத் தானம்செய்யவேண்டுமென்பது கடமை. "உங்களுக்கு மீதியாய் இருப்பதிலிருந்து தானம் செய்யுங்கள்" (லூக். 11: 41). இது சாதாரணமாய் நீதியைப் பொறுத்த கடமையல்ல. (சில விசேஷ சந்தர்ப்பங்களில், நீதியைப்பொறுத்த கடமையாகவும் இருக்கலாம்.) ஆனல், கிறிஸ்தவ பிறர்சிநேகத்தைச்சார்ந்த கடமையாகும். மனிதருடைய சட்டங்களும், தீர்மானங்களும் மெய்யான கடவுளாகிய கிறிஸ்துநாதருடைய சட்டங்களுக்கும், தீர்மானங்களுக்கும் விட்டுக்கொடுக்க வேண்டும். கிறிஸ்துநாதர் தருமம்கொடுப்பதைப்பற்றித் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறர்: "பெற்றுக்கொள்ளுகிறதை விடக் கொடுக்கிறதே பாக்கியம்" (அப். 20: 35). நாம் ஏழைகளுக்குச் செய்த அல்லது, செய்யமறுத்த ஒரு உதவியைத் தமக்கேசெய்ய, அல்லது செய்யமறுத்த உதவியாகக்கணிக்கிறர்: "என்னுடைய மிகவும் சிறிய சகோதரர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே அதைச் செய்தீர்கள்" (மத். 25: 40).

(வளரும்)

## தொழிலாளர் தினக் கொண்டாட்டங்கள்

**ரோமாபுரியில்:** மேதினக்கொண்டாட்டங்களும், தொழிலாளரின் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பர்திருநாளும் அகில உலகிலுமுள்ள கத்தோலிக்கரினுல் பெருமளவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. ஆங்காங்கு பிரமாண்டமான ஊர்வலங்களும், கூட்டங்களும் நடாத்தப்பட்டன. ரோமாபுரியில் நடாத்தப்பட்ட பிரமாண்டமான தொழிலாளர் மாநாட்டிலே பரிசுத்த பாப்பாசர் உரைநிகழ்த்தினர். சம்பேதுருவானவர் மாதேவாலயத்தில் தொழிலாளர் தினத்தைக்கொண்டாடும்படியாகத் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளருக்கு உரைநிகழ்த்திய பாப்பாசர்: "திருச்சபையானது தாழ்மையுடையோரின் தாயாக இருந்துவருகின்றது. திருச்சபைத்தாய் களைப்புற்றவர்களைப்பாதுகாத்து, மனிதனது ஆன்மீக, பொருளாதார முன்னேற்றத்தை வற்புறுத்திவந்திருக்கின்றது" என்று கூறினர். மேமாதம் 14-ந்திகதி சம்பேதுருவானவர் சதுக்கத்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச தொழிலாளர் மாநாட்டையும் குறிப்பிட்டார் பாப்பாசர்.

**நீர்கொழும்பு:** பல்லான்சேனை, போலவலானு, கடற்கரைவீதி, பெரிய முள்ளா, டூவா, பலங்கட்துறை முதலிய மிசாம்களில் இருந்துகூடிய தொழிலாளர்கள் நீர்கொழும்பு சம்பேதுருவானவர் தேவாலயத்தின் முன்றிலிலே கூடினர். ஒவ்வோர் மிசாமிலுமிருந்து வந்த தொழிலாளிகளின் பிரதிநிதிகள் கொண்டுவந்த செய்திச்சுருள்கள் ஒவ்வொன்றுய்ப் பலிப்பூசை வேளையில் காணிக்கை ஒப்புக்கொடுக்கும் நேரத்தில் வாசித்துக்காட்டப்பட்டது.

அதில் தொழிலாளர் தங்கள் தெய்வீக தொழிலாளியினிடத்தில் கேட்ட விண்ணப்பம் ஆவது: தங்களுக்குள் யாதோர் பிழவும் ஏற்படாதவண்ணம் நசரேத்தின் தேவதொழிலாளனுன நமதாண்டவர் யேசுக்கிறிஸ்துநாதர் தங்களைக்காப்பாற்றவேண்டும் என்பதே.

**மாறவிலா:** இளம் கிறிஸ்துவ தொழிலாளர்களால் உருவாக்கப்பட்டதாகிய மேதினவிழாவொன்றிற்கு மிகத்தொகையினர் சமூகமளித்தனர். பூசைவேளையிலே அவர்களில் ஒருவர் எழுந்துநின்று பூசையின் திருச்சடங்குகள் எப்படித் தொழிலாளரின் சீவியத்தை அண்டி நிற்கின்றனவென்பதையிட்டு வியாக்கியானம் செய்தார். அதன்பின் காணிக்கை வேளையில் ஒவ்வொருவரும்தத்தம்ஒஸ்தி அப்பங்களைப் பீடத்தில் காணிக்கையாக வைத்தார்கள். பூசையின் பின்நடந்த கூட்டத்திலே தையல் தொழிலாளியாகிய ஒருவரே தலைமைவகித்தார். வண. அந்திராடி சுவாமியார் தமது சொற்பொழிவில் தொழிலாளர் தொழிலின் மகிமையை விளங்கிக்கொள்ளவேண்டுமெனவும், ருஷியாபுரட்சியை உண்டுபண்ணுமுன்னமே 13-ம்சிங்கராயர் பாப்பாசர் தமது நிருபத்தில் இதை யிட்டு எச்சரிக்கை கொடுத்திருக்கிறர் என்றும் சொல்லிமுடித்தார்.

**மொறட்டுவா:** இவ்விடம்நடந்த மேதினவிழாவில் இளம்கிறிஸ்துவ தொழிலாளர்சங்கமே முன்வந்துமுயற்சித்தது. விளையாட்டுப் போட்டியுடன் மேதினவிழாவும் ஆரம்பித்தது. டபிள்யு. கே. விஜயமன்ன தலைமை வகித்துப் பேசியபொழுது தொழிலாளர் கட்சிமுனையில் சேரலாகாதென்றும் தங்களது சொந்தத் தொழில்சங்கங்களில் யாதோர் விலங்குமின்றி பங்குபற்றிப்பயனடைய வேண்டுமென்றும் சொல்லிமுடித்தார்.

**கொட்டாஞ்சேனை:** இளம்கிறிஸ்துவ தொழிலாளர்சங்கமும், இளம் கிறிஸ்துவ மாணவசங்கமும் பாலர்மரியாயின் சேனைக்கூட்டமும் மேதின விழாவன்று காலை வறியவர்கள் சீவிக்கும் இடங்களில் சென்று அவர்களுக்கு உதவி செய்வதில் செலவழித்தார்கள். சாயந்தரம் ஆசனக்கோவில் முன்றிலில் சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டன. ஈற்றில், தொழிலாயுதங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன.

இதே போன்ற கூட்டங்கள் கந்துக்குருண்டாவிலும், நயக்கண்டாவிலும், பையகலாவிலும் நடந்தேறினவென்று அறியவருகிறது.

## புதிய சமூகநிருபம்

பரிசுத்த 13-ம்சிங்கராய பாப்பாசரின் "தொழிலாளர் சாசனம்" என்றழைக்கப்படும் பொதுநிருபத்தின் (றேறும் நோவாறும்) 70-வதுஆண்டு நிறைவுஞாபகத்தையொட்டி மேமாதம் 14-ந்திகதி புதிய சமூகநிருபம் ஒன்றைத்தாம் வெளியிடவிருப்பதாக 23-ம்அருளப்ப பாப்பாசர் முன்னர் தெரிவித்திருந்தார். இப்புதிய சமூகநிருபத்தைப் பரிசுத்ததந்தை இம்மாதம் 1-ந்திகதி தொழிலாளர் தினமன்று விடுத்துள்ளார். இந்நிருபம் "றேறும் நோவாறும்", "குவாட்ருஜேசிமோ அன்னோ" என்னும் இருசமூகநிருபங்களைத் தழுவியதாகவே இருக்கின்றது.

## மணிக்கோபுரம் ஆசீர்வதித்தல்:

மட்டக்களப்பு, தாண்டவன்வெளி, பரிசுத்த வியாகுலமாதா தேவாலய வளவில் புதுத்தோற்றத்துடன் நிருமாணிக்கப்பட்டிருக்கும் மணிக்கோபுரம் கடந்த 23-3-61-இல் கட்டளைக்குரு வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக் சுவாமியவர்களால் ஆசீர்வதிப்புக் கைங்கிரியங்களுடன் முடிபெய்தியது. தாண்டவன் வெளி கத்தோலிக்க ஐக்கியசங்கத்தலைவரும், மாவட்ட கருமாதிகாரியுமான திரு. எஸ். எம். கியோப்பிலஸ் அவர்களால் சமயானுசாரப் பொருள்கள் விற்பனை நிலையம் திறந்துவைக்கப்பட்டது. அத்தருணம், மணிக்கோபுரம்,விற்பனை நிலையம், பிரசங்கத்தொட்டி, மணியறை, கொடித்தம்பம், மின்சார வெளிச்சம் ஆகியன ஒன்றின்மேலொன்றுய் அமைவுற்றிருப்பது குறிப்பிடத்தக்கதெனவும், கட்டளைச்சுவாமியவர்களின் அயராத ஊக்கம் பாராட்டத்தக்கது எனவும் குறிப்பிட்டு, பங்குக்கிறீஸ்தவர்கள் சார்பாக சுவாமியாசவர்கட்கு நன்றியுரையும் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லாச வேளை

— நமது நிருபர் அமலன்

## ● பாப்புவாதற்குத் தகுதி ● டெலிவிஷன் மேற்றிராணியார் ● அவுஸ்திரேலிய கருதினல்

கார்மெலா: முதலில் எனக்கு ஒரு வினவுக்கு விடையளித்துவிட்டு அப்புறம் உங்கள் சல்லாபத்தைத் தொடங்குங்கள். பாப்பரசராகத் தெரியப்படுவதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும்?

அன்ரன்: இதுதானா தெரியாது? கருதினலாக, வயதில் முதிர்ந்தவராக, அறிவாளியாக, கல்விகேள்விகளில் சிறந்தவராக இருக்க வேண்டும்.

பெரியண்ணா: முழுத்தவறு. ஞானஸ்நானம் பெற்ற எந்த ஆண்மகனுக்கும் பாப்புவாகத் தகுதி உண்டு.

நிர்மலா: அண்ணா வேதத்தை மாற்றுகிறாரா, அல்லது திருச்சபை தன் சட்டங்களையெல்லாம் மாற்றிவிட்டதா?

அகஸ்ரீன்: இப்படித்தான் பலர் எண்ணுகிறார்கள். கல்வி, அந்தஸ்து, அறிவு, துறவறம், கருதினல் பதவி எதுவுமே பாப்புவாவதற்கு அவசியமில்லை. பாப்புமார் தெரிவுபற்றிய சட்டங்கள் குறைவு, சம்பிரதாயங்களே அதிகம். கருதினல்மார் திருச்சங்கத்துக்கே பாப்புவைத் தெரியும் உரிமை சட்டபூர்வமாக அளிக்கப்பட்டிருக்கிறது. கருதினல்மாருக்குள் ஒருவரைப் பாப்புவாகத் தெரிவது பலகாலமாகச் சம்பிரதாயமாக இருந்துவருகிறது.

இயுஜின்: ஆகவே, கருதினல்மாருக்குள் தகுதியான நபர் அகப்படாவிடில் அவர்கள் வெளியிலிருந்து ஒருவரைத் தெரிய முற்படலாம் அல்லவா?

பெரியண்ணா: இவ்விதம் முன்னர் சில சந்தர்ப்பங்களில் நடைபெற்றிருக்கிறது. சில மேற்றிராணிமார்கள், மடாதிபதிகள் முதலியோரும் கருதினலந்தஸ்தின்றியே தெரியப்பட்டிருக்கின்றனர்.

அகஸ்ரீன்: சென்ற பாப்பு தேர்தலில் கருதினல்களிடையே தகுதிபெற்றவர் இல்லாவிடில், பேரறிஞர் புல்டன் ஷீன் ஆண்டவரவர்கள் தெரியப்படலாம் என பத்திரிகைகள் குறிப்பிட்டன.

நிர்மலா: துறவறு அந்தஸ்து குறிப்பிடப்படாததால் இல்லறத்தோரும் தெரியப்படலாமல்லவா?

பெரியண்ணா: திருமணமானவர்களும் பழையகாலத்தில் பாப்புவாகத் தெரியப்பட்டுப் பதவிவகித்திருக்கின்றனர். ஒருவேளை அடுத்தமுறை உனது கணவரும் பாப்புவாகத் தெரியப்படலாம்!

அன்ரன்: அப்புறம் பெரியத்தான், குழந்தைகளையும், பெரியக்காவையும் விட்டுவிட்டு வத்திக்கானுக்குப் போய்விடுவார்.

கார்மெலா: ஏன், அக்காவும் கூடப் போகலாமே!

அகஸ்ரீன்: இப்படியான சங்கடங்களையும் பிரச்சினைகளையும் தவிர்க்கவே, கடந்த பல நூற்றாண்டுகளாகக் கருதினல்மார் தங்களுக்குள் ஒருவரையே தெரிந்து வருகிறார்கள்.

அஞ்சலா: ஆமாம். ஏதோ, ஒரு மேற்றிராணியார்பற்றிக் குறிப்பிட்டீர்களே, யாரவர்?

அகஸ்ரீன்: அமெரிக்காவைச் சேர்ந்த புல்டன் ஷீன் மேற்றிராணியார் பேரறிஞர். கத்தோலிக்க தத்துவங்களை எடுத்து ஆணித்தரமாக அறிவுறுத்துவதில் வல்லுனர். உவமான உவமேயங்களுடன் வெகு அழகாகப் பேசுவார். வாரத்துக்கொருதடவை வானொலியிலும், டெலிவிசனிலும் இவரைக் காணாவிட்டால், பொருள்பொதிந்த இவரது அறிவுரைகளைக் கேட்காவிட்டால் அமெரிக்கமக்களுக்கு, குறிப்பாக இளைஞர்கட்குத் தூக்கமே வாராதாம்.

அப்பா: அப்போஸ்தலரான அர்ச். சின்னப்பரைப் போன்றவர் அவர் என்று சொல்லலாமே.

பெரியண்ணா: அவரையும் மிஞ்சி விட்டார் என்றுகூட எண்ணுவாருமுண்டு. அமெரிக்க விசுவாசப்பரப்புதற்சங்கத்தின் பிரதமநிர்வாகியாகக் கடமையாற்றுவதுடன், இரண்டு மாதாந்த சஞ்சிகைகளுக்கும் ஆசிரியராகவிருக்கிறார். சிறந்த எழுத்தாளர் அவர். ஏராளமான கத்தோலிக்க நூல்களையும் எழுதிக் குவித்திருக்கிறார். டெலிவிஷன் மேற்றிராணியார் என இவரை அழைக்கின்றனர்.

அகஸ்ரீன்: இங்கே பையன்களும், சிறுமிகளும், சினிமாநடிகர்களின் பைத்தியங்களாகத் திரியவில்லையா? இதுபோல அமெரிக்காவில் ஏராளமான யுவதிகளும் இளைஞர்களும் ஷீன் ஆண்டவரின் பைத்தியமாகத் திரிகின்றனர். தினசரி பதினாயிரக்கணக்கான தபால்கள் ஆண்டவருக்கு வருகின்றனவாம். இளைஞர்கள் தங்கள் சங்கடங்கள் பிரச்சினையை நாடுகின்றனர். எல்லோருக்கும் தகுந்த முறையில் ஆலோசனைகளை வழங்கி இளைஞர்களின் சிறந்தவோர் வழிகாட்டியாக விளங்குகின்றார்.

இயுஜின்: இத்தனை சிறப்புவாய்ந்த ஷீன் ஆண்டவர் பாடசாலையில் படிக்கும்போது மிகவும் பின்தங்கிய மாணவனாயிருந்தாராம். மாணவர் மன்றங்களில் பேசக் கூச்சப்படுவாராம். தொடர்பாக இரண்டு வசனங்களை மனனம் செய்யக்கூடாத அளவுக்கு மோசமான மனன சத்தியுடையவராயிருந்தாராம். தனது மந்த நிலையையுணர்ந்து இடைவிடாது உழைத்தபடியால் இன்றைய உயர்நிலையை அடைந்துள்ளார் என ஒரு பத்திரிகையில் வாசித்திருக்கிறேன்.

பெரியண்ணா: உழைப்பால் உயர்ந்தோர் வரிசையில் அவுஸ்திரேலிய கருதினல் நோமன் கில்றேய் ஆண்டவரையும் குறிப்பிடலாம். ஒரு தையற்காரனின் புதல்வர் இவர். பள்ளியில் படிக்கவேண்டிய பராயத்தில் பத்திரிகை விற்றுத் திரிந்தார். பின்னர் முயற்சியுடன் சிறிது கற்றுத் தந்திச் சேவையில் அமர்ந்தார். முதலாவது மகாயுத்தத்திலும் கடமையாற்றினர். பின்னரே உலகவாழ்வை வெறுத்துத் துறவறத்தில்புகுந்து, நல்லகல்வியறிவும் பெற்று, இன்று திருச்சபையின் உன்னத ஸ்தானமொன்றில் அமர்ந்திருக்கிறார். அவுஸ்திரேலியாவில் மிகப் பெரிய பிரமுகர்களுள் ஒருவராகவும் மதிக்கப்படுகிறார்.

அப்பா: (அம்மாவைப் பார்த்து) என்ன, இன்று கலகலப்பின்றிக் காணப்படுகிறாய்.

கார்மெலா: சின்னண்ணா பாடசாலைக்குப் போய்விட்டாரல்லவா? அதுதான் அம்மா சோகமாயிருக்கிறா என்று பதில் அளித்தாள்.

### உல்லாச வேளையில் நீங்கள் சந்திக்கும் முக்கிய பிரமுகர்கள்

**அப்பா:** இளைப்பாறிய ரெயில்வே நிலைய அதிபர்.

**பெரியண்ணா:** கச்சேரியில் ஒரு பிரதான அதிகாரி.

**சின்னண்ணா:** ஆசிரியகலாசாலை மாணவன்.

**அமலன்:** நமது நிருபர்.

**அன்ரன்:** கடைசிப்பையன். சிரேஷ்ட வகுப்பில் பயிலுகிறான்.

**அகஸ்ரின்:** மூத்த மாப்பிள்ளை. பட்டதாரி ஆசிரியர்.

**நிர்மலா:** அவரது மனைவி. பயிற்றப்பட்ட ஆசிரியை.

**இயூஜின்:** புது மாப்பிள்ளை. மீன்பிடி இலாகா பரிசோதகர்.

**ஆஞ்சலா:** அவரது மனைவி. ஆங்கில ஆசிரியை.

**கார்மெலா:** கடைசிப் பெண். கனிஷ்ட வகுப்பில் பயிலுகிறாள்.

**அம்மா:** இல்லத்தரசி.

## வத்திக்கான் பொதுச் ......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்குமிடையில் வத்திக்கான் பொதுச்சங்கத்துக்காக விசேஷ வேண்டுதல் செய்யும்படி கேட்டிருக்கிறார். இச்சமயத்தில் வத்திக்கான் பொதுச்சங்கம் ஆண்டவருடைய சுவிசேஷத்தைப் பரப்புவதில் சகல கிறிஸ்தவ சபையினரும் ஐக்கியப்பட வழி வகுக்கும்படி கடவுள் அனுக்கிரகம் செய்ய வேண்டுமென்று ரோமாபுரித் திருச்சபைச் சகோதரருடன் இங்கிலாந்துத் திருச்சபை அங்கத்தினரும் மன்றாடும்படி விரும்புகிறேன்" என்று கூறினர்.

## டி மசனட் ஆண்டவ......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சுவாமியார் முதலியோரும், இன்னும் இவர்களைப்போன்ற அநேக பரித்தியாகிகளும் இலங்கை மக்களின் இருதயங்களில் இன்னும் சுடர்விட்டு எரிந்துகொண்டே இருக்கிறார்கள்.

இப்புனிததினத்தில் டி மசனட் ஆண்டவர் அவர்களின் ஞானப் புத்திரராகிய அமலோற்பவ மரியநாயகி சபைப் பரித்தியாகிகளின் திருப்பணியால் நன்மையடைந்த இலங்கை மக்களாகிய நாம் ஆண்டவர் அவர்கட்கு எமது நன்றியைக் காண்பித்தல் முற்றும் அவசியமாகும். எனவே, சருவேசுரன் அவரை விரைவில் திருச்சபையின் வணக்கத்திற்கு உயர்த்தும்படியும், அவர் ஸ்தாபித்த

## தாண்டவன்வெளி மரியாயின் பத்திச்சபைகளின் சேவை

மேற்படி பங்கில் மூன்று பத்திச்சபைகள் உண்டு. அவை: காணிக்கை மாதா வாலிபர்சபை, மாசில்லாத மாதா பெண்கள்சபை, வியாகுலமாதா கிறிஸ்தவத் தாய்மார்சபை. இவை யாவும் பங்குக்குருவானவர் வண. பிதா G. E. L. வம்பேக் சுவாமி அவர்கள் ஆதரவின் கீழ் இயங்குகின்றன. இச்சபைகள் பங்கின் முன்னேற்றத்திற்காகப் பின்வரும் வேலைகளைச் செய்து வருகின்றன.

**வாலிபர் பத்திச்சபை:** இச்சபையின் ஓர் அங்கத்தவன் கோயில் பராமரிப்பு வேலை செய்து வருகிறார். ஏனையோர் வயோதிபர் மடம் சென்று அங்கு ஞான உபதேசம் செய்து வருகின்றனர். வைத்தியசாலை தரிசித்தல், அர்ச். வின்செந்திப்போல் சபையிற் சேர்ந்து வறியவர்கட்குதவி செய்தல், வாரமொருமுறை பங்குக் கோவிலைச் சுத்தம் செய்தல் ஆதியன இவர்கள் செய்துவரும் வேலைகளாகும்.

**பெண்கள் பத்திச்சபை:** வயோதிபர் மடம், வைத்தியசாலை தரிசித்தல், பூசைஉடைகளைத் திருத்துதல், பூச்செண்டுகளைத் துப்புரவுசெய்தல் முதலியன.

**தாய்மார்கள் பத்திச்சபை:** வயோதிபர் மடம், வைத்தியசாலை தரிசித்தல், ஞான உதவி தேவைப்பட்டோருக்கு உதவிசெய்தல், கூட்டுச்செபமாலை ஓதல் முதலியன.

மேற்கூறியசபைகளின் அங்கத்தவர்கள் சனிவாரங்களில் பொதுப் பூசை கண்டு திவ்விய நற்கருணை உட்கொள்ளுவர். இப்பூசை வேளைகளில் கட்டளைக் குருவானவர் விசேட பிரசங்கமூலம் சபை அங்கத்தவர்களை ஊக்கப்படுத்தி வருகிறார்.

சந்நியாசசபை மென்மேலும் விருத்தியடைந்து திருச்சபையில் பன்மடங்கு கூடிய பணிபுரிய வழிகளைத் திறந்துவிடும்படியும் இறைவனை இறைஞ்சுவோமாக.

## பாகிஸ்தானில்மற்றுமொரு கத்தோலிக்க நீதிபதி

கராச்சியில் வக்கிலாக இருந்துவந்த திரு. எர்மான் தியடோர் ரெய்மண்டு அவர்கள் மேற்குப் பாகிஸ்தானின் பிரதம நீதிமன்றத்தின் நீதிபதிகளுள் ஒருவராக நியமிக்கப் பெற்றுள்ளார். இவருடைய மூத்த சகோதரர் அலஹபாத் மேற்றிராணியாராகிய வந். லெயோனார்டு ரெய்மண்டு ஆண்டகையவர்கள். இவர்களுடன் பிறந்த சகோதரி தற்போது சென்னையில் அர்ச். தோமையார் கன்னியர் மடத்தின் தலைவாயிருக்கும் சங். டொரொத்தி தாயாரவர்கள்.

பாகிஸ்தானில் பிரதம நீதிபதியாயிருப்பவரும் ஒரு கத்தோலிக்கரேயாவர்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday May 20-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org